# காயத்துள்
# நிண்ற கடவுள்

4-8

குகையூர் சித்தநாதேச்சுராதீனத்
திருவருள் நிலையம் பூசை மண்டப
நினைவு வெளியீடு

பேராசிரியர் திரு. அடிகளாசிரியர்

# காயத்துள் நின்ற கடவுள்


ஆசிரியர்

**திரு. அடிகளாசிரியர்**

ஓய்வுபெற்ற தமிழ்ப் பேராசிரியர்

சித்தநாதேச்சுராதீனம்

குகையூர் அஞ்சல்-606 306

விழுப்புரம் மாவட்டம்



பதிப்பாசிரியர்

சோதிடரத்னா

**முனைவர் அ. சிவபெருமான்**

4சி, வெள்ளிவிழாச் சாலை

செயங்கொண்டசோழபுரம்-621 802

பெரம்பலூர் மாவட்டம்

குகையூர் சித்தநாதேச்சுராதீனத் திருவருள்
நிலையத்தின் ஆன்மநலப்பணி வெளியீடு - 2

# நூல்குறிப்பு


நூல் பெயர் : காயத்துள் நின்ற கடவுள்

ஆசிரியர் : திரு. அடிகளாசிரியர்

பதிப்பு : முதல் பதிப்பு [14—3—1998]

உரிமை : திரு. அடிகளாசிரியர்

அளவு : டிம்மி 1/8

பக்கங்கள் : 68

படிகள் : 1000

வெளியீட்டாளர் : திருவருள் நிலைய வெளியீட்டகம்
குகையூர் அஞ்சல்
நயினார்பாளையம் வழி
கல்லக்குறிச்சி வட்டம்
விழுப்புரம் மாவட்டம் - 606 306
தமிழ்நாடு.

அச்சகம் : சபாநாயகம் பிரிண்டர்ஸ், சிதம்பரம்


விலை ரூபாய் 15-00 மட்டும்

# பொருளடக்கம்

பூசை மண்டப நினைவு வெளியீடு

பதிப்புரை

நூலாசிரியர் முன்னுரை

குகையூர் திருமூல சித்தநாதர் ஆதீனத் திருவருள்
நிலைய பூசை மண்டபம் நிறுவ நிதி உதவியோர்
பட்டியல்

பகுதி-அ

காயத்துள் நின்ற கடவுள் — 1 – 16

பகுதி-ஆ

காயத்துள் நின்ற கடவுளை உணர்த்தும்
திருமந்திரப் பாடல்கள் — 17 – 47

பேராசிரியர் திரு. அடிகளாசிரியரின்
வாழ்வும் பணியும் — 49 – 56

# பூசை மண்டப நினைவு வெளியீடு

## குகையூர் திருமூல சித்தநாதர் ஆதீனத் திருவருள் நிலைய பூசைமண்டபத் திறப்புவிழா நினைவு வெளியீடு

வெகுதான்ய வருடம் மாசி மாதம் 30-ஆம் நாள் [14—3—1999] ஞாயிற்றுக்கிழமை மாலை 6-00 மணிக்குமேல் 8-00 மணிக்குள் குகையூர் திருமூல சித்தநாதர் ஆதீனத் திருவருள் நிலைய பூசை மண்டபத் திறப்புவிழா நிகழ்ந்தது. அத்திறப்பு விழா நினைவாக யான் எழுதிய, "காயத்துள்நின்ற கடவுள்" என்ற நூலைவெளியிட்டுள்ளேன்.

குகையூர் திருமூலசித்தநாதர் ஆதீனத்தைச் சேர்ந்த குருபரம்பரையினர்க்குக் குகையூரிலும், அதனைச் சுற்றியுள்ள வீரபயங்கரம், பில்லங்குளம், கோவிந்தம்பாளையம், சின்ன சேலம் முதலான ஊர்களிலும், சேலம், தாரமங்கலம், வெண்ணந்தூர், ஈரோடு, கோவை முதலான ஊர்களிலும் செங்குந்தர் மரபைச் சேர்ந்த பல குடும்பத்தினர்களும், வன்னியர் மரபைச் சேர்ந்த குடும்பத் தினர்களும் சீடர்களாக உள்ளனர். இச்சீடர்களுக்கெல்லாம் அருள்வழங்கும் நிலையமாக இவ்வாதீனம் விளங்கவேண்டும் என்பது எனது விருப்பமாகும். இவ்விருப்பத்தின் காரணமாக, யான் வாழ்ந்துவரும் வீட்டில் பரம்பரையான பூசை இடத்தில் திருவருள் நிலைய பூசை மண்டபத்தை நிறுவியுள்ளேன். நிறுவிய இப்பூசை மண்டபத்தில் திருமூலரின் திருமந்திரக் கருத்தைக் கருதிய நிலையில் சிவசொரூபத்தை உணர்வில் நிறுத்தி மௌன நிலையில் இருந்து விடவும் எண்ணியுள்ளேன்.

திருவருள் நிலையத்தைச் சேர்ந்த இப்பூசை மண்டபத்தில் எக்காலத்தும் சிவம் விளங்க வேண்டும். மேலும், எல்லோரும் வந்துபோகின்ற, ஒன்றுபடுகின்ற ஞானநூல் நிலையமாகவும் இது இருத்தல் வேண்டும் என்பது எனது வேண்டுகோளாகும். இவ்வேண்டுகோளை ஆதீனப் பொறுப்பாளர்களும் சீடர்களும் நிறைவேற்றுவார்களாக.

இங்ஙன்

திரு. அடிகளாசிரியன்

# பதிப்புரை

திருமூலர் அருளிய திருமந்திரத்தை நுட்பமாக அணுகி ஆராய்ந்தால் அரிய பல கருத்துக்கள் நமக்குக் கிடைக்கும். எனது தந்தையார் பேராசிரியர் **திரு. அடிகளாசிரியர்** தமது முதிர்ந்த வயதில் (90) திருமந்திரத்தையும், பகவத்கீதையையும் இன்ன பல நூல்களையும் நாளும் ஓதி உணர்ந்து வருகின்றார். அவர், உணர்ந்த அரிய பல கருத்துக்களை நூலாக்கிப் பதிப்பித்து வெளியிடுவதில் நான் மிகவும் பெருமைப் படுகின்றேன். அவ்வகையில் சென்ற ஆண்டு, **''திருமூலரும் பேருரையும்''** என்ற அரிய நூலைப் பதிப்பித்து வழங்கியுள்ளேன். இவ்வாண்டில் திருமந்திரத்தை அடியாகக் கொண்டு அவரெழுதிய, **''காயத்துள் நின்ற கடவுள்''** என்ற நூலைப் பதிப்பித்து வழங்கியுள்ளேன். இந்நூல், எங்கள் **ஆதீனப் பூசைமண்டபத் திறப்புவிழா நினைவாக வெளியிடப் பெறுகின்றது.**

மனித உடம்பு நிலையற்றது, மனித வாழ்வு பயனற்றது என்ற வெறுப்பு நிலையை மாற்றி, 'மனித உடம்பிலேயே கடவுளைக் காணமுடியும்; இதுவே, சித்திகளுக்கெல்லாம் பெரிய சித்தி' என்ற கருத்தை அனைவரும் உணர்வதற்காக இந்நூல் வெளிவருகின்றது. மேலும், இந்நூலுள் திருமந்திரக் கருத்துக்களும், பகவத்கீதை கருத்துக்களும் எவ்வாறெல்லாம் ஒத்துப் போகின்றன என்பதையும் உணரமுடிகின்றது.

திருவருள் நிலைய வெளியீட்டகத்தின் சார்பாக வெளிவரும் நூல்களெல்லாம் பிறரால் எளிதில் செய்ய முடியாத அதே சமயத்தில் கடின உழைப்பின் வெளிப்பாடாகவே அமைந்திருக்கும். மேலும், இந்நிறுவன நூல்களை நாங்கள் விலை குறைத்தோ அல்லது நன்கொடை வெளியீடாகவோ வெளியிட்டு வழங்கி வருகின்றோம். இப்பணியை நாங்கள் செய்வதற்கு இறைவன் திருவருளும், எங்கள் ஆதீனச் சீடர்களின் உதவியுமே பெரிதும் காரணமாகும்.

இவ்வாறு, கற்கோவிலாக, **''பூசை மண்டபத்தையும்''**, சொற்கோவிலாக, **''காயத்துள் நின்ற கடவுள்''** என்ற நூலையும் உருவாக்க உதவிய அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

10—3—99
செயங்கொண்டம்

இங்ஙன்
**அ. சிவபெருமான்**

# நூலாசிரியர் முன்னுரை

ஆந்திர நாட்டிலிருந்த கிருஷ்ண தேவராயரை உள்ளிட்ட விஜயநகர மன்னர்கள் தமிழ்நாட்டையும் பற்றி ஆண்டு வந்தனர். அவர்கள் காலத்தில் ஆந்திர நாட்டிலிருந்த பலர் அரசியல் தலைவராகத் தமிழ் நாட்டில் குடியேறினர். அவர்களில் ஒருவர் **இலிங்கா ரெட்டியார்** என்பவராவர். இவர் வெங்கனூர், பெரம்பலூர் முதலானவற்றை உள்ளிட்ட நிலப்பகுதியை ஆண்டு வந்தார். அடுத்த, துறைமங்கலத்தையும் இடமாகக் கொண்டு வாழ்ந்து வந்தனர். **இலிங்கா ரெட்டியார்** என்பவர் தம்பெயருக்கேற்ப இலிங்கதாரணம் உடைய வீரசைவசமய ஆசாரத்தை மேற்கொண்டிருந்தார். இவருக்குக் குருவாக விளங்கியவர் **சென்னபசவதேவர்** என்பவர் ஆவர். இவர் பசவேசருடைய தங்கை மகனாக விளங்கிய **சென்னவசவ தேவருடைய** பரம்பரையில் வந்தவராவர்.

சென்னபசவ தேவருக்குத் துறைமங்கலத்தில் மடம் கட்டிக் கொடுத்து அதில் வாழ்ந்திருக்குமாறு இலிங்கா ரெட்டியார் செய்தார். இதன்பின் மடத்திற்கு அடுத்த இடத்தில் சிவப்பிரகாச சுவாமிகளுக்கு மடம் கட்டிக் கொடுத்திருந்தார். இச்செய்தி வரலாறு அறிந்த உண்மையாகும். பிற்காலத்தில் இலிங்கா ரெட்டியார் குடும்பம் சின்னப் பண்ணை, பெரிய பண்ணை என்று இரண்டு பிரிவாகப் பிரிந்தது. இச்சின்னப் பண்ணையார் குடும்பம் துறைமங்கலத்துக்கு அடுத்த நடுவாசல் கிராமத்தில் தங்கி அங்குச் சிறப்பாக வாழ்ந்து வந்தனர்.

சின்னப் பண்ணையார் குடும்பத்தினரும் இலிங்கா ரெட்டியாரைப் போல தம் குருவின் குடும்பத்தில் ஒரு பிரிவினரை நடுவாசலுக்கு அழைத்துத் தன் வீட்டிற்குப் பக்கத்திலேயே மடம் அமைத்துக் கொடுத்து வாழ்ந்துவரச் செய்தனர். அந்த ஆசிரியர் குடும்பத்தில் குருதேவர் என்பவர்

அங்குச் சிறப்பாக வாழ்ந்து வந்தனர். அவர் சித்தவைத்தியத்தில் மிகச் சிறந்தவர். அவருக்குத் தோன்றிய பிள்ளைகள் மூவர். முதல்வர் **நடராச தேவர்** என்பவராவர். அவருக்கு அடுத்தவர் **குங்குமவல்லி** என்றும் குங்குமம் என்றும் அழைக்கப்பட்ட பெண்பாலராவர். கடைசியாகப் பிறந்தவர் **சிவப்பிரகாச தேவர்** என்பவராவர். இக்குங்குமவல்லியைக் குகையூர் சித்தநாதேச்சுர ஆதீனத்தைச் சேர்ந்த **பட்டத்துப் பெரியசாமி ஐயர்** என்பவர் இரண்டாவது மனைவியாகத் திருமணம் செய்து கொண்டார். இவர்தான் அடிகளாசிரியராகிய எனக்குத் தாயாராக அமைந்தவர். என் தந்தை எனக்கு ஏழுவயதில் காலமாகி விட்டார். என்னை நன்கு வளர்த்து, ஒழுக்கத்தைக் கற்பித்து, நன்கு படிக்கச் செய்து, நான் நல்ல முறையில் வாழ்வதற்கு ஏற்ற பல செயல்களை எல்லாம் என்னுடைய தாயார் குங்குமவல்லிதான் செய்தனர். அவர்கள் தமிழை நன்கு கற்றவர். வேதாந்த நூல்களில் நல்ல பயிற்சி உடையவர். அவர்களின் அடித்துணையை வணங்கிக் கொண்டு, **"காயத்துள் நின்ற கடவுள்"** என்கின்ற நூலை நான் வெளியிடுகின்றேன். இவ்வெளியீடு குகையூர் திருமூல சித்தநாதர் ஆதீனத் திருவருள்நிலைய பூசை மண்டபத் திறப்பு விழா நினைவாக வெளியிடப் பெறுகின்றது.

**பூசை மண்டபம் நிறுவிய வரலாறு:**

ஈசுவர யாண்டு பெய்த அடைமழையால் என்வழிபாட்டுக் கூரைக் கட்டடம் மிகவும் சிதைந்து விட்டது. சிதைந்த அக்கூரைக் கட்டடத்தைப் புதியதாகப் புதுப்பிக்கக் கருதினேன். மேலும், எங்கள் ஆதீனத்திற்குப் பல்வேறிடங்களில் சீடர்கள் இருப்பதால் அவர்கள் வந்து தங்கிக் குருவருளையும் திருவருளையும் பெறுவதற்காக நிலையான பூசைமண்டபத்தை நிறுவவும் எண்ணித் திருவருளைச் சிந்தித்திருந்தேன்.

குகையூர் திருமூல சித்தநாதர் ஆதீனத்தைச் சேர்ந்த குரு பரம்பரைக்குச் சேலம் மாவட்டத்திலுள்ள தாரமங்கலம் என்னும் ஊரில் செங்குந்தர் மரபைச் சார்ந்த பல குடும்பத்தினர் சீடராக உள்ளனர். அவருள் ஒரு குடும்பத்தினர் சந்தவள்ளியார் குடும்பத்தினர் ஆவர். அவருள் ஒருவராகிய திரு. மு. கந்தசாமி முதலியாருடைய புதல்வராய் தற்பொழுது ஓசூரிலே தங்கி,

''**சிவாசீனிவாசாபில்டர்ஸ்**'' என்கின்ற பெயரில் கட்டடத் தொழில் புரிந்து வருபவர் **திரு. ச. க. சீனிவாசன்** என்பவராவார். இவர் கடந்த மேமாதத்தில் ஓர் நாள் நேரில் வந்து குருகாணிக்கையாக ரூபாய் ஐயாயிரத்தை வழங்கிச் சென்றார். அத்தொகையை அடியாக வைத்து பூசை மண்டபக் கால்கோள் பணியைத் தொடங்கினேன்.

மேற்படி செய்தியைக் கேள்வியுற்ற தாரமங்கலம் பேரூராட்சி மன்றத் தலைவரும், சந்தவள்ளியார் குடும்பத்தைச் சேர்ந்த **திரு. சுப்பு முதலியார்** அவர்களின் புதல்வருமாகிய **திரு. சு. பூபதிராஜன்** அவர்கள் நேரில் வந்து பூசை மண்டபத் திற்காக ரூபாய் ஐயாயிரத்தை வழங்கிச் சென்றார். மேலும், இவர் தாரமங்கலத்தில் வாழ்ந்து வரும் சித்தநாதேச்சுராதீனச் சீடர்களை அணுகி இவ் அறப்பணியை எடுத்துக் கூறிப் பல ஆயிரங்களைத் திரட்டிக் (பட்டியல் பார்க்க) கொடுத்து மேற்படி பணியை ஊக்குவித்தார். இடையிடையே **திரு. ச. க. சீனிவாசனும்**, **திரு. சு. பூபதிராஜனும்** நேரில் வந்து மேலும் சில ஆயிரங்களை வழங்கி உதவினர்.

மற்று நரம்பு நோயால் பாதிக்கப் பெற்றுப் பல ஆண்டுகளாக வீட்டிலேயே தங்கி உள்ள எனக்கு, ஈரோட்டில் வாழ்ந்து வாணிபம் செய்துவரும் எங்கள் ஆதீனச் சீடர்கள் புரவலர்களாக இருந்து என்னைப் புரந்து வருகின்றனர். அப்புர வலர்களுள் **திரு. ஆ. மோகன சுந்தரம்**, **திரு. சிங்காரம்**, **திரு. இரா. கிருட்டிணசாமி**, **கோவை திரு. கு. இராமலிங்கம்** ஆகியோர்களும் இப்பணிக்குப் பொருளுதவி புரிந்தனர்.

திருவருள் நிலைய வெளியீட்டகம் மூலம் பதிப்பித்த எனது நூல்களை எனது இளையமகன் **அ. சிவபெருமான்** மிக முயன்று விற்றுத் தொகையாக வைத்திருந்தார். அத்தொகையான ரூபாய் எட்டாயிரத்தையும், எனது குடும்பச் செலவிற்காக வைத்திருந்த சில ஆயிரங்களையும் பயன்படுத்தி ஒருவாறு பூசை மண்டபத்தை நிறைவு செய்தேன்.

எனது மூன்றாவது புதல்வராகிய **திரு. அ. நச்சினார்க்கினியன்** என்பார் இப்பூசை மண்டபக் கட்டடப் பணியை நல்ல முறையில்

கட்டுவதற்காக நாளும் உழைத்தார். எனது இரண்டாவது மகன் **திரு. அ. இளங்கோவனும்,** எனது மருமகன் **திரு. சி. பாலசித்தனும்** அவ்வப்போது நேரில் வந்து கட்டட வேலைக்கு உதவினர். எனவே, இப்பூசை மண்டபம் நிறுவ நிதி உதவி செய்த அனைவருக்கும், ஏனைய உதவிகளும் செய்த ஏனையோர்க்கும் எனது அன்பான நல்வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**நூல் உருவான வரலாறு:**

மேற்படி பூசைமண்டபத்தை நிறுவியதோடன்றி அப்பூசை மண்டபத் திறப்பு நாளன்று நல்ல நூல் ஒன்றினை வெளியிடவும் முடிவு செய்திருந்தேன். அந்நூல், பிறவி நோயை நீக்குமாறும் இறைவன் திருவருளைப் பெறுமாறும் இருத்தல் வேண்டும் எனக் கருதிக் கொண்டு, **''காயத்துள் நின்ற கடவுள்''** என்ற தலைப்பில் இந்நூலை வெளியிட்டுள்ளேன்.

யான் வாழ்நாளின் பெரும் பகுதியைத் தமிழ்மொழி வளர்ச்சிக்காகவே உழைத்து வந்த காரணத்தினால், என் மூளை நரம்புகள் மெலிவடைந்து நோயுற்றுக் கை நடுக்கம் உண்டாயிற்று.

இந்நிலையால் என்னால் நன்கு எழுத முடிவதில்லை, ஆதலால் என் சிந்தனையைப் பிறரைக் கொண்டும் எழுதவித்து நூலாக்கி வருகின்றேன் இவ்வெழுத்துப் பணியை என் இரண்டாவது மகன் **திரு. அ. இளங்கோவன்** தொடங்கி எழுதினார். சின்னசேலம் சிவநேசர்மடம் என்னும்மேலமடத்தில் வாழ்ந்து வரும் **உயர்திரு கு. குகநேசன்** என்பவரும் புதல்வன் திருநிறைசெல்வன் **கு. மோகனசுந்தரம்** என்பவரும் அடிக்கடி வந்து எழுத்துப் பணிக்கு உதவினார். **திருப்போரூர் சிதம்பர சுவாமிகள்** திருமகனும் எனது மருமகனுமாகிய **உயர்திரு. சி. பாலசித்தன்** என்பார் என்னோடு பல நாட்கள் தங்கி எனக்கும் இவ்வெழுத்துப் பணிக்கும் உதவினார்.

**அச்சகப் பணி**

வழக்கம் போல் என்னுடைய நூல்களைப் பதிப்பாசிரியராக அமர்ந்து பதிப்பித்து வரும் எனது இளைய மகன் **அ. சிவபெரு மானை** அழைத்துக் கையெழுத்துப் பிரதியை வழங்கி நல்ல

முறையில் அச்சிட்டு வழங்குமாறு ஒப்புவித்தேன். அவரும் அப்பிரதிகளைப் பார்வையிட்டு நல்ல முறையில் திருத்தமான அச்சுக் காப்பியைத் தயார் செய்து அதை என்னிடமும் படித்துக் காட்டி அச்சேற்றினார். மேலும், அச்சகம் சென்று மெய்ப்பு, அட்டை முதலானவற்றை ஒழுங்கு செய்து தம் கடின உழைப்பால் பதிப்பித்து வழங்கியுள்ளார்.

மாரியப்பா நகர் **புலவர் இரா. கணபதி** அவர்கள் என்பால் பற்றுக் கொண்டு உடனுக்குடன் மெய்ப்புக்களைத் திருத்தி உதவினார். இவ்வாறு நூலாக்கத்திற்கு உதவிய மேற்கூறிய அனைவரையும் நன்றாக வாழ்த்தி என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த பல ஆண்டுகளாய் என்னுடைய நூல்கள் பலவற்றை நல்ல முறையில் அச்சிட்டு வழங்கி வரும் சிதம்பரம் சபாநாயகம் அச்சக உரிமையாளர் **திரு. கௌதம சங்கர்** அவர்கள் இந்நூலை அச்சிட்டு வழங்கியுள்ளார். அவர், நல்ல பல ஆன்மீக நூல்களை அச்சிட்டு வழங்குவதால் நாளும் நாளும் சிறந்தோங்கி வருகின்றார். ஆதலால் அவரும் அவரது அச்சகப் பணியாளர்களும் மேன்மேலும் வாழ்வில் உயர்ந்து சிறப்படைய இறைவனை வேண்டுகின்றேன்.

இந்நூலை ஆயிரம் படிகள் அச்சிட ஏறத்தாழ எட்டாயிரம் ரூபாய்க்கு மேல் செலவாயின. எனது ஓய்வூதியத் தொகையைப் பயன்படுத்தி அச்செலவைச் சரி செய்தேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**என்னோடு இருக்கும் இறையவனே**
**என்றன் நினைவை அறிவாயே**
**பொன்னோ பொருளோ விரும்புகிலேன்**
**போதும் போதும் இனிப்பிறப்பு**
**நின்னோடு ஒன்றிச் சிவமாகும்**
**நேயம் நிலைமை கிடைத்துவிட்டால்**
**என்னே இனியான் ஏதும்வேண்டேன்**
**இந்த நிலையை அருள்வாயே**

1—3—1999
குகையூர்

இங்ஙன்
**திரு. அடிகளாசிரியன்**

# குகையூர் திருமூல சித்தநாதர் ஆதீனத் திருவருள் நிலைய பூசை மண்டபம் நிறுவ நிதி உதவியோர் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு S. K. சீனிவாசன், | ஓசூர் | 15001 |
| 2. | திரு S. பூபதிராஜன், | தாரமங்கலம் | 5001 |
| 3. | சந்தவள்ளி திரு கைலாசம் & சன்ஸ், | தாரமங்கலம் | 1001 |
| 4. | ,, திரு சின்னத்தம்பி | முதலியார் சன்ஸ் | 1001 |
| 5. | பெரிய வீட்டுக்கார மாரிமுத்து | முதலியார் தாரமங்கலம் | 1001 |
| 6. | சந்தவள்ளி S. முத்துசாமி | ,, | 1001 |
| 7. | ,, T. M. அருணாசலம் | ,, | 1001 |
| 8. | புள்ளிக்கார கந்தசாமி | முதலியார் ,, | 1001 |
| 9. | பு. கு. பெரியண்ண | முதலியார் ,, | 1001 |
| 10. | திரு T. A. பார்த்தசாரதி | ,, | 1000 |
| 11. | திரு சண்முக கந்தசாமி | முதலியார் ,, | 2000 |
| 12. | திரு ரங்கைய குப்புசாமி | முதலியார் ,, | 1001 |
| 13. | காட்டுக்கார K. N. எல்லப்ப | முதலியார் ,, | 1001 |
| 14. | ,, K. N. தசரதன் | ,, | 1000 |
| 15. | ,, K. R. நடேசன் | ,, | 1000 |
| 16. | ,, K. A. அர்த்தநாரி | ,, | 1001 |
| 17. | காசுக்கடை T. P. மாரிமுத்து | ,, | 1500 |
| 18. | காட்டுக்கார விநாயகா | அப்பாவு ,, | 500 |
| 19. | நாட்டாண்மை T. K. அருணாசலம் | ,, | 1001 |
| 20. | சிவசிவா சுப்ரமணிய | முதலியார் ,, | 1001 |
| 21. | ,, T. P. ராஜமாணிக்கம் | ,, | 1001 |
| 22. | திரு T. M. பாலசுப்ரமணியம் | ,, | 1001 |
| 23. | தர்மராஜ T. D. வைரவேலு | ,, | 1001 |
| 24. | ,, T. D. வையாபுரி | முதலியார் ,, | 1001 |
| 25. | K. A. P. தங்கவேல் | ,, | 1001 |

| | | | |
|---|---|---|---|
| 26. | K. A. P. சுப்ரமணியம் | ,, | 1001 |
| 27. | ராசிமகன் திரு சுப்ரமணியம் | ,, | 1001 |
| 28. | K. R. A. பழனிசாமி, A. P. S. மளிகை | ,, | 1001 |
| 29. | K. R. A. தெய்வசிகாமணி கவிதா மளிகை | ,, | 1001 |
| 30. | குருந்து திரு பெரியசாமி | ,, | 1001 |
| 31. | காடையாம்பட்டி T. V. அண்ணாமலை | ,, | 1001 |
| 32. | ,, T. P. முத்துராமலிங்கம் | ,, | 1000 |
| 33. | திரு பி. மே. வை. செல்லப்ப முதலியார் | ,, | 1001 |
| 34. | திரு V. A. கந்தசாமி முதலியார் | ,, | 1001 |
| 35. | திரு T. K. திருசடைநாதன் | ,, | 1001 |
| 36. | திரு T. V. பழனிசாமி | ,, | 500 |
| 37. | வேல பெரியசாமி | ,, | 500 |
| 38. | கோவிந்தராஜ் முதலியார் | ,, | 101 |
| 39. | அ. சு. கு. மாரிமுத்து முதலியார் | ,, | 51 |
| 40. | திரு ஆ. மோகனசுந்தரம் ஈரோடு | | 2000 |
| 41. | திரு இரா. கிருட்டிணசாமி தமிழாசிரியர் ஈரோடு | | |
| 42. | திரு சிங்காரம் ஈரோடு | | |
| 43. | கு. இராமலிங்கம் (வெல்லமண்டி, கோவை) | | |
| | கூடுதல் தொகை | | 57,179 |

**குறிப்பு:** மேற்குறிப்பிட்ட நிதியை யான் கேட்காமலேயே இறைவனின் திருவருட் செயலால் சீடர்களே மன முவந்து வழங்கினர் என்பதைத் தெரிவித்துக் கொள் கின்றேன்,

உ

இறைவன் துணை

# காயத்துள் நின்ற கடவுள்

## பகுதி - அ

தோற்றுவாய்

ஒழுக்கமும் கல்வியும் உயர்ந்த நோக்கமும்
இழுக்கிலா வாய்மையும் இரக்க எண்ணமும்
அழுக்கிலா உள்ளமும் அடியற்கு ஈந்திடும்
செழுக்கண பதியடி சித்தை செய்குவாம்.

செழுமையான கணபதியின் திருவடியைக் கருதிக் கொண்டு "காயத்துள் நின்ற கடவுள்" என்ற தலைப்பில் முகப்புக் கட்டுரை ஒன்றை நான் எழுதுகின்றேன்.

மக்கள் வாழ்க்கை புறவாழ்க்கை என்றும் ஆன்மீக வாழ்க்கையாகிய அக வாழ்க்கை என்றும் இருவகைப்படும். புறவாழ்க்கைக்கு மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து புலன்களும் மனத்தோடு கூடிச் செயற்பட வேண்டும். அப்படிச் செயற்பட்டால் நாம் உலகப் பொருள்களைக் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து மெய்யுற்று நன்கு அனுபவிப்போம். எனவே, உலகப் பொருள்களின் அனுபவம் எல்லாம் புறவாழ்க்கை ஆகும். உலகப் பொருள்களின் வாழ்க்கையை அகவாழ்க்கை என்றும், புறவாழ்க்கை என்றும் பிரித்துக் கூறுவது தமிழிலக்கிய மரபாகும். அந்த அகவாழ்க்கையைப் பற்றி நாம் இங்கு ஆராயவில்லை.

அகவாழ்க்கையாவது மனஉணர்வும், ஆன்ம உணர்வும், கடவுள் உணர்வு என்னும் திருவருள் உணர்வும் என்னும் மூன்று உணர்வுகளைக் கருவியாகக் கொண்டு தன்னையும், தனக்கு மேற்பட்ட அறிவுப் பொருட்களையும் ஆராய்ந்து, உணர்ந்து, தெளிந்து அனுபவித்தலாகும்.

இந்த அகவாழ்க்கையை வடநூலார் "**அத்யாத்ம வித்தை**" என்பர். கண்ணன் கீதையுள், "**நான் அத்யாத்ம வித்தையாக இருக்கின்றேன்**" என்று கூறியுள்ளதைக் கருதினால் அத்யாத்ம வித்தையின் சிறப்பு நமக்குப் புலப்படும். தமிழறிஞர் இந்த அத்யாத்ம வித்தையை, "**தம்மில் தலைப்படுதல்**" என்றும், "**தான்அவனாதல்**" என்றும் கூறுவர்.

**ஆயத்துள் நின்ற அறுசமயத் தோரும்**
**காயத்துள் நின்ற கடவுளைக் காண்கிலர்**
**மாயக் குழியில் விழுவர் மனைமக்கள்**
**பாசத்தில் உற்றுப் பதைக்கின்ற வாறே"**

(திருமந்திரம் 1530)

என்னும் திருமந்திரப் பாட்டை அடியாகக் கொண்டு காயத்துள் நின்ற கடவுள் என்ற ஆராய்ச்சியைத் தொடங்குகின்றேன்.

## மேற்பாட்டின் பொருளாவது

கூட்டமாக நின்ற ஆறுசமய மக்களும் உடம்பினுள் நின்ற கடவுளைக் காணும் அறிவாற்றல் இல்லாதவராய் உள்ளனர். அதனால் அவர்கள் மயக்க உணர்வாகிய குழியில் விழுவர். அதன் காரணமாய் மனைவி மக்கள் முதலான பற்றுள் விழுந்து துன்பப் படுபவராவர் என்றவாறு.

எனவே, மயக்க உணர்வு நீங்கி உலகப் பற்றால் துன்பப் படாமல் இருத்தற்காக, நாம் காயக் கடவுளை ஆராய

வேண்டுமென்க. இக்கடவுளை அறிதற்கு நமக்கு அகப்பார்வை வேண்டும்.

சாத்தீரம் ஒதுஞ் சதுர்களை விட்டுநீர்
மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்குமின்
பார்த்தவப் பார்வை பசுமரத் தாணிபோல்
ஆர்த்த பிறவி அகலவிட் டோடுமே (திருமந்திரம் 1631)

என்னும் இப்பாட்டு அகப்பார்வை உணர்த்துகின்றது. அப்பாட்டின் பொருள் வருமாறு:

சாத்திரங்களை ஓதி அதன் அறிவால் காயத்துள் நின்ற கடவுளைப் பற்றிய கருத்துக்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். அதன்பின் அக்கடவுளை அனுபவ உணர்வால் உணர்வதன் பொருட்டு ஒருமாத்திரைக் காலமேனும் புறப்பார்வையைவிட்டு அகப்பார்வையைத் தொடங்குங்கள். அப்பார்வை நன்றாக அமைந்து விட்டால் பச்சை மரத்தில் அடித்த ஆணிபோல அப்பார்வை நன்கு பதிந்து அகவாழ்க்கை உணர்ச்சியை உண்டாக்கி விடும். அதனால் பிறவித்துயர் நீங்கும் என்றும் அறிக.

எனவே, சாத்திரங்களைப் படித்து, காயக் கடவுளைப் பற்றிய செய்திகளைத் தெரிந்து கொள்வது, "அபரஞானமாகும்" அபரஞானத்தால் தெரிந்து கொண்டபின் அக்கடவுளை உட்பார்வையால் நோக்கி அறிந்துகொள்வது, "பரஞானமாகும்" அப்பரஞானத்தைப் பெறும்படி மேற்கண்ட பாட்டு நமக்கு அறிவுறுத்துகின்றது.

ஆன்மீகம் என்பது தான் என்று கருதப்படும் அறிவுப் பொருளை அல்லது தாம் என்று கருதப்படும் அறிவுப் பொருளை ஆராய்ந்துணர்வதாகும்.

யான் எழுதி வெளியிட்டுள்ள, "திருமந்திரமும் பேருரையும்" என்ற அரிய ஆராய்ச்சி நூலில் பக்கம் 85-இல் குறிப்பிடப் பட்டுள்ள செய்தியைக் கீழே அறிக.

## அறிவுப் பொருள்:

ஒரு சமயவாதி இவ்வுலகத்தில் ஒரே ஒரு அறிவுப் பொருள்தான் உண்டு, அதிலிருந்து கற்பனையால் எல்லாப் பொருள்களும் விரிந்தன என்பர். மற்றொரு சமயவாதி பரனும் சீவனும் என இரண்டு அறிவுப் பொருள்கள் அனாதியாக உள்ளன என்பர். சைவ சமயத்தவரும் அக்கருத்தைப் பின் பற்றியவராவர். ஆனால் திருமூலரோ மூன்று அறிவுப் பொருள் அனாதியாக உண்டு என்று கூறுகின்றார். எனவே, ஆன்மீக ஆராய்ச்சி செய்பவர் இவர் தம் கருத்துக்களை வேண்டும் அளவில் தெரிந்து கொள்ள வேண்டும்.

## அறிவுப் பொருள் ஒன்று என்பார் கூற்று:

இவர் பிரமம் என்னும் அறிவுப் பொருள் ஒன்றே உண்டென்பர். அவர் கூறும் செய்தியாவன:

சத்தாகியும், சித்தாகியும், ஆனந்தமாகியும், நித்திய மாகியும், பரிபூரணமாகியும் உள்ள பிரமம் என்னும் அறிவுப் பொருள் ஒன்றே உள்ளது. அதன் சந்நிதியில் இன்னதென்று கூறப்படாத [அவாச்சியமான] மாயை என்னும் பொய்ப் பொருள் உண்டு, அதனிடத்திலிருந்து மூன்று கற்பனைகளால் ஈசனும், சீவனும், அவர்களுக்கு வேண்டிய எல்லாப் பொருட் களும் கற்பனையால் உண்டாயின என்பர். அக்கற்பனை மூலகற்பனை என்றும் சூக்கும கற்பனை என்றும் தூலகற்பனை என்றும் மூன்று விதமாய் இருக்கும். மூலகற்பனையால் ஈசனும் சீவனும் தோன்றினர். சூக்கும கற்பனையால் கன்மேந் திரியம், ஞானேந்திரியம், அந்தக் கரணங்கள், பிராணாதி

வாயுக்கள் முதலானவெல்லாம் தோன்றின. தூலகற்பனையால் தன்மாத்திரைகளும் பஞ்சீகரண ஐம்பூதங்களும் புவன போகங்களும் தோன்றின என்பர்.

ஆனால் உலகத்தில் நிகழும் கற்பனை நிகழ்ச்சி எல்லாம் கற்பனையைக் காணும் ஒருவனும் அவனுக்கு முன்னே உள்ள மெய்ப் பொருள் பொய்ப்பொருள் என்னும் இரண்டும் கற்பனைக்கு அடியான காலமும் ஆகிய நான்கால் நிகழும். இந்நான்குப் பொருள்களால் நிகழும் கற்பனையானது ஒரு பொருள் உண்டென்பார் கூற்றுக்குப் பொருந்துமா என்பது நமக்குப் புரியவில்லை.

பரனும் சீவனும் என்றும் பதியும் பசுவும் என்றும் இரண்டு பொருள் உண்டென்பார் கூற்றைத் திருமூலர் மறுக்கின்றார். அவர் மறுக்கும் மறுப்பைத் திருமூலரும் பேருரையும் என்ற எனது நூலால் அறிந்து கொள்க.

திருமூலர் மேற்கண்ட இருவரின் கருத்துக்கு மாறுபட்டு அறிவுப் பொருள் மூன்று உள்ளன என்பர். ஒன்று இயங்குகின்ற சீவன். இரண்டு அச்சீவனை இயக்குகின்ற பரன் என்னும் ஈசன். மூன்று மேற்கூறிய இரண்டுக்கும் அடியான "அகண்ட பொருளாகிய சிவம்" என்பதாகும். சிவத்தைப் பிரமம் என்றும் கூறுவர்.

மூன்று அறிவுப் பொருள் உண்டு என்பதைத் திருமூலருடைய திருமந்திரமும் பகவத்கீதையும் கூறுகின்றன. இக்கருத்தை ஆன்மீக ஆராய்ச்சி செய்பவரெல்லாம் தெளிவாக உணர்ந்து கொள்க.

உடம்பின்கண் உயிர், உயிரை இயக்கும் பரன் என்ற இரண்டு அறிவுப் பொருள் உண்டு. இவ்விரண்டின் பரன் உயர்ந்த பொருளாகும். இப்பரனை மணிவாசகர்

"உற்ற யாக்கையின் உறு பொருள்" என்று சிறப்பிப்பார். அப்பொருளே நாம் எடுத்துக் கொண்ட காயக்கடவுளாகும்.

## பரதுரியமாகிய காயக் கடவுள்

பரதுரியமாகிய காயக் கடவுளைத் திருமந்திரம்,

"ஒக்க நின்றான்" (15) என்றும்,

"வேங்கடநாதன்" (190) என்றும்,

"உள்ளத்துளான்" (431) என்றும்,

"மறையவன்" (433) என்றும்,

"உறுபொருள்" (725) என்றும்,

"காயத்துள் நின்ற கடவுள்" (1530) என்றும்,

"மலருறை மாதவன்" (1531) என்றும்,

"என்னுடல் கோயில் கொண்டான்" (2223) என்றும்,

"அன்னம், அன்னமிரண்டுள" (2005, 2006) என்றும்,

"கண்காணி" (2069) என்றும்,

"காயக் குழப்பன்" (2365) என்றும்,

"காயப்பைக்குள் நின்ற கள்வன்" (2122) என்றும்

இவ்வளவு பெயர்களால் கூறுகின்றது. இக்காயக் கடவுளைத்தான் பகவத்கீதை க்ஷேத்ரக்ஞன் என்றும் அக்ஷர புருஷன் என்றும் கூறுகின்றது. திருமந்திரம் சீவதுரியம், பரதுரியம் இரண்டிற்கும் மேற்பட்ட அகண்ட பொருளாகிய சிவதுரியம் என்றும் மூன்று பொருள்களைக் கூறுவது போல கீதையும் க்ஷரபுருஷன் அக்ஷர புருஷன், இந்த இரண்டிற்கும் அதீதமாய் உத்தமமாய் விளங்கும் புருஷோத்தமன் என்ற மூன்று பொருள்களைக் கூறுகின்றது. இக்குறிப்பிட்ட பெயர்களையெல்லாம் நாம் தனித்தனியே ஆராய்ந்து

உணர்ந்தால் காயக் கடவுளின் இலக்கணம் நமக்குத் தெளிவாகப் புலப்படும் என்க.

திருமந்திரம் சீவனை அணு என்றும் உயிர் என்றும் சீவன் என்றும் வேறு பெயர்களால் குறிப்பிடும். எனவே, உடம்பில் உள்ள அறிவுப் பொருள் சீவன், பரன் என்னும் இரண்டென்றும் அவ்விரண்டில் பரன் என்னும் அறிவுப் பொருளே இயக்கும் முதல்வனாய் உள்ளது என்றும் உயிராகிய மற்றொரு பொருள் இயங்கும் உயிராய் நின்று தலைமை இழந்து நிற்பது என்றும் அறிஞர் உணர்ந்து கொள்க. பரன், சீவன் என்னும் இரண்டு பொருளையும் திருமந்திரம் அன்னம் என்ற பொதுச் சொல்லால் குறிப்பிடும். அதில் முதல் அன்னத்தைத் தன்னிலை அன்னம் என்றும், இரண்டாம் அன்னமாகிய சீவனை பின்ன மடவன்னம் என்றும் கூறும்.

அன்னம், பின்னமடவன்னம் என்னும் இரண்டு சொற்களால் பரனுக்கும் சீவனுக்கும் உள்ள வேறுபாட்டை அறிஞர் உணர்ந்து கொள்ளலாம். முதல் அன்னம் தன்னிலையில் நிற்கும் தலைமை பெற்ற அன்னமென்க. இது ஈசனாகிய பரதுரியமாகும். பின்னமடவன்னம் என்பது சீவனாகிய சீவதுரியத்தை. இது பரதுரியத்தில் வேறுபட்டது என்பதையும் அறியாமை உடையது என்பதையும், அதற்குள்ள சொல்லால் உணர்ந்து கொள்ளலாம். இவ்விரண்டிற்கும் மேலானது 'சிவம்' என்க. இந்த மூன்று பொருட்களை எடுத்துக் கொண்டு திருமூலர் துவம்பதத்தில் சீவனை வைத்தும், தத்பதத்தில் பரனை வைத்தும், அசிபதத்துள் சிவனை வைத்தும் துவம் தத் அசி என்னும் மகாவாக்கிய ஆராய்ச்சியைச் செய்கின்றார்.

திருமந்திரம் சீவதுரியம், பரதுரியம், இவ்விரண்டிற்கும் மேற்பட்ட அகண்ட பொருளாகிய சிவதுரியம் என்று மூன்று பொருள்

களைக் கூறுவது போல, கீதையும் க்ஷரபுருஷன் அக்ஷரபுருஷன் என்ற இரண்டிற்கும் அதீதமாய் உத்தமமாய் விளங்கும் புருசோத்தமன் என்ற மூன்று பொருள்களைக் கூறுகின்றது.

## கீதைக் கருத்து

த்வாவிமௌ புருஷௌ லோகே க்ஷரஸ் சாக்ஷர ஏவச
க்ஷர ஸர்வணி பூதானி கூடஸ்தோ^Sக்ஷர உச்யதே.
(அத்தியாயம் — 15 சுலோகம் எண் – 16)

உத்தம புருஷஸ்த்வன்ய: பரமாத்மேத் யுதாஹ்ருத:
யோ லோகத்ரய மாவிச்ய பிபர்த்யவ்யய ஈச்வர:
(அத்தியாயம் — 15 சுலோகம் எண்–17)

யஸ்மாத் க்ஷரமதீ தோ^Sஹமக்ஷராதபீ சோத்தம:
அதே^Sஸ்மி லோகே வேதச ப்ரதித புருஷோத்தம:
(அத்தியாயம் — 15 சுலோகம் எண்-18)

கீதையில் பதினைந்தாவது அத்தியாயத்தில் உள்ள மேற்கண்ட மூன்று சுலோகங்களும் ஆன்மீக உலகிற்கு உயிர் நாடி ஆகிய சுலோகங்களாகும். இவை ஆன்மீக உலகத்தில் வழங்கும் மூன்று அறிவுப் பொருள்களின் இலக்கணத்தைத் தெளிவாக உணர்த்துகின்றன. அதனால் அறிஞர் இப்பகுதியை மிகவும் கருதிப் படிக்க வேண்டும் என்க.

## மூதல் சுலோகத்தின் பொருள்:

இந்த சம்சாரமாகிய அசுவத்த மரத்தில் க்ஷரன் என்றும் அக்ஷரன் என்றும் இரண்டு புருஷர் இருக்கின்றனர். அவருள் "க்ஷரன்" என்பவன் எல்லா ஜீவபூதங்களும் ஆகும். "அக்ஷரன்" என்பவன் அச் சீவபூதங்களுக்கு அடியாய் இருக்கின்ற அழியாத கூடஸ்தனாகும்.

**விளக்கம்:**

புருஷோத்தம அத்தியாயத்தில் உள்ள இந்தச் சுலோகம் இரண்டு புருஷர்களைக் கூறுகின்றது. ''புருஷன்'' என்கின்ற வடமொழிச் சொல்லுக்கு ''அமரகோசம்'' என்னும் ''வடமொழி நிகண்டு'' மாணவன் (மனிதன்) என்றும், ஆத்மா என்றும் இரண்டு பொருள்களைக் கூறுகின்றது. அந்நிகண்டின் கருத்தின் படி புருஷோத்தம அத்தியாயம் என்னும் பெயர்க்கு உத்தமமான ஆத்மாவைப் பற்றிய அத்தியாயம் என்று பொருள் கொள்ள வேண்டும். உத்தமமான ஆத்மா எது என்றால் அது பரமாத்மாவே ஆகும். மேற்கண்ட சுலோகத்தில் சொன்ன இரண்டு புருஷர்களில் க்ஷரபுருஷன் என்பவன் அழியும் ஆத்மாவாகிய ஜீவாத்மாவைக் குறிக்கும். அது எதனால் அழியும் ஆத்மா வாயிற்று எனில் அழிகின்ற தூல உடல், சூக்கும உடல் என்னும் காரிய உபாதிகளைப் பெற்றிருப்பதால் அதனை க்ஷரபுருஷன் என்றும் க்ஷர ஆத்மா என்றும் கூறுகின்றார். மற்றொரு புருஷன் அக்ஷரபுருஷன் ஆகும். அதற்கு அழியாத ஆத்மா என்று பெயர். அது சர்வக்ஞன முதலான ஏழுகாரண உபாதிகளைப் பெற்றிருப்பதால் அதனை அழியாத புருஷன் என்று கூறுகின்றார். அதற்குக் கூடஸ்தன் என்று ஒரு பெயரும் கூறப்பட்டுள்ளது. அச்சொல்லுக்கு அடியாய் இருந்து தாங்குபவன் என்பது பொருளாகும்.

**இரண்டாவது சுலோகத்தின் கருத்து:**

மேற் சுலோகத்தில் கூறிய ''க்ஷர'' ''அக்ஷர'' புருஷர்களுக்கு அந்நியமாய் இருப்பவர் உத்தம புருஷராவர். அவர் பரமாத்மா என்று அழைக்கப் படுகின்றார், அவர் மூன்று உலகங்களிலும் ஆவேசித்து அவற்றைத் தாங்குகிறார். இவ்வுத்தம புருஷனைக் கீதையே பரமாத்மா என்று கூறுகின்றது.

## மூன்றாவது சுலோகத்தின் கருத்து:-

கண்ணனாகிய யான் க்ஷர ஆத்மாவிற்கு அதீதமாயும் அக்ஷர ஆத்மாவிற்கு உத்தமமாயும் இருக்குங் காரணத்தால் என்னை உலகத்தவரும் வேதம் முதலான நூல்களும் "புருஷோத்தமன்" என்று புகழ்கின்றன. கீதை சொன்ன மூன்று பொருள்களில் க்ஷர புருஷனைத் திருமந்திரம் சீவதுரியம் என்றும், அக்ஷர புருஷனை பரதுரியம் என்றும், உத்தம புருஷனாகிய புருஷோத்தமனைச் சிவதுரியம் என்றும் கூறும்.

## மூன்று புருஷர்கள்

"க்ஷர புருஷன்" என்றும் "அக்ஷர புருஷன்" என்றும் "உத்தம புருஷன்" என்றும் கூறப்படும் மூன்று புருஷர்களை நாம் மேலே அறிந்து கொண்டோம். அம்மூன்று புருஷர்களையும் தனித்தனியே ஆராய்வோம்.

## க்ஷர புருஷன்:

காரிய உபாதிகளுடன் கூடிய ஜீவ வர்க்கங்கள் அனைத்தும் க்ஷர புருஷன் என்க. இந்த ஜீவ வர்க்கங்களுக்கு இருப்பிடம் பிரக்ருதி என்க. இப்பிரக்ருதி **அபரப்ரக்ருதி** என்றும், **பரப்ரக்ருதி** என்றும் இரண்டு விதமாக இருக்கும். அவ்விரண்டினுள் பரப்பிரக்ருதியே க்ஷர புருஷனுக்கு இருப்பிடம் என்க. இச் செய்தியைக் கீதையில் உள்ள ஏழாவது அத்தியாயத்தின் நான்காவது, ஐந்தாவது சுலோகங்களால் அறிந்து கொள்ளலாம். ஐந்தாவது சுலோகம் கூறும் ஜீவ பூதம் என்கின்ற ஒன்று க்ஷர புருஷனாகும். இக் க்ஷர புருஷனைக் கண்ணபிரான் தன் அம்சம் என்று பதினைந்தாவது அத்தியாயம் ஏழாவது சுலோகத்தில் கூறுகின்றார். அச்சுலோகம் வருமாறு:

"மமை வாம்லோ ஜீவலோகே ஜீவபூத ஸநாதன
மந: ஷஷ்டா நீந்த்ரியாணி ப்ரக்ருதிஸ்தானி கர்ஷதி

## இச்சுலோகத்தின் பொருள்:

எக்காலத்தும் எனது அம்சமே ஜீவனாகத் தோன்றி ஜீவ உலகத்தில் அபரப்ரக்ருதியில் நிற்கின்ற மனம் உட்பட ஆறு இந்திரியங்களைப் போகத்தில் இழுக்கின்றது என்பது பொருளாகும். மேற்கூறியவற்றால் "க்ஷர புருஷனுடைய இயல்பை அறிந்து கொண்டோம். கீதையில் பதின்மூன்றாம் அத்தியாயமாகிய "க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞ விபாக யோகம்" என்கின்ற அத்தியாயத்தில் ஐந்தாவது, ஆறாவது சுலோகங்கள் க்ஷேத்ரம் என்னும் ப்ரக்ருதியைப் பற்றி கூறுகின்றன. அவற்றுள் ஐந்தாவது சுலோகம் அபரப்ரக்ருதியையும் ஆறாவது சுலோகம் பரப்ரக்ருதியையும் கூறுவனவாகும். அவற்றுள் ஆறாவது சுலோகத்தில் வந்துள்ள சேதனா என்கின்ற சொல் ஜீவபூதமாகிய க்ஷர புருஷனைக் குறிக்கும் என்க.

ஆகவே க்ஷர புருஷன் காரிய உபாதிகளைப் பெற்ற ஜீவபூதம் என்றும் இதற்கு இருப்பிடம் பரப்பிரக்ருதி என்றும் இது கண்ணனுடைய அம்சமாக கூறப்படுகின்றது என்றும், ஆகிய இவற்றையெல்லாம் க்ஷர புருஷனுக்கு இலக்கணமாகக் கொள்க.

## அக்ஷர புருஷன்:

இரண்டாவது புருஷனாகிய அக்ஷர புருஷனைப் பலர் ஜீவன் என்றே கருதுகின்றனர். இப்புருஷன் ஜீவன் அன்று. ஜீவனை இயக்குகின்ற பரம்பொருளாகும் என்கின்ற வேறு பாட்டை அறிஞர் தெளிவாக உணர்ந்து கொள்க.

இவன் அபரப்ரக்ருதி பரப்ரக்ருதி என்ற இரண்டு பிரக்ருதிகளையும், பரப்பிரக்ருதியில் உள்ள ஜீவனையும் இயக்குகின்ற பரன் என்று அறிந்து கொள்ள வேண்டும். இப்புருஷனைப் பற்றிய

செய்திகளை, "க்ஷித்ர க்ஷித்ரக்ஞ விபாகயோகம்" என்கின்ற பதின்மூன்றாவது அத்தியாயத்தால் உணர்ந்து கொள்ளலாம். இவ்வத்தியாயத்தில் இரண்டாவது சுலோகம் க்ஷேத்ரம் என்பது உடம்பு முதலானவற்றை உள்ளடக்கிய ப்ரக்ருதி என்பதும் அந்த க்ஷேத்திரங்கள் அனைத்திலும் கண்ணனாகிய யான் க்ஷித்ரக்ஞனாக உள்ளேன், என்று கூறுவதையும் கருதினால் அக்ஷர புருஷனாகிய க்ஷேத்ரக்ஞன் கண்ணனே என்பதும் ஜீவபூதங்கள் எல்லாம் கண்ணனுடைய அம்சமே என்பதும் ஆகிய இந்த வேறுபாடு நமக்குப் புலப்படுகின்றது. எனவே கண்ணனாகிய க்ஷேத்ரக்ஞன் என்னும் அக்ஷர புருஷனின் இயல்பைப் பதின் மூன்றாவது அத்தியாயத்தால் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும் இவ்வத்தியாயத்துள் 19 ஆவது சுலோகத்தில் இருந்து க்ஷேத்ரக்ஞனாகிய அக்ஷர புருஷனின் இயல்பை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். பத்தொன்பதாவது சுலோகம் பிரக்ருதி புருஷன் என்னும் இரண்டும் அனாதி என்று கூறும்.

இருபதாவது சுலோகம் ப்ரக்ருதியானது காரிய காரண வடிவாய் இருந்து உடல் முதலான பல பொருட்களை ஜீவனுக்குத் தோற்றுவித்தலுக்கு ஏதுவாய் இருக்கும். புருஷன் என்பது ஜீவனுக்கு உண்டாகும் சுக துக்க நுகர்ச்சிக்கு ஏதுவாய் இருக்கும் என்று கூறும். இருபத்தோராவது சுலோகம் க்ஷேத்ரக்ஞனாகிய புருஷன் ப்ரக்ருதிக்கு தலைவனாய் இருந்து ஜீவன் இன்ப துன்பங்களை அனுபவித்தற்கு ஏதுவாய் விளங்கி தான் முதலில் அவற்றைத் துய்க்கும். இருபத்திரண்டாவது சுலோகம் அக்க்ஷேத்ரக்ஞன் "உபதிருஷ்டா" வாகவும் "அனுமந்தா" வாகவும், "பர்த்தா" வாகவும் "போக்தா", வாகவும் "மஹேஸ்வரன்" ஆகவும், "பரமாத்மா" வாக்வும் விளங்கி அப்பெயர்க்கு உள்ள செயல்களைப் பெற்றிருக்கும் என்று கூறுகின்றது. இச்சுலோகத்தில் வந்துள்ள ஒவ்வொரு சொல்லும் ஆராய்ந்து உணரத் தக்கனவாகும்.

அவற்றுள் "**உபதிருஷ்டா**" என்பது ஜீவனிடம் உடன் இருந்து பார்ப்பவன் என்று பொருள், கொள்ள வேண்டும்.

"**அநுமந்தா**" என்பது ஜீவன் ஒவ்வொரு பொருளையும் நினைப்பதற்குத் துணை புரிந்து நிற்கும் முதல் நினைப்பாளன் என்பது பொருளாகும்.

"**பர்த்தா**" என்பது ஜீவனைத் தாங்குபவன் என்பது பொருளாகும்.

"**போக்தா**" என்பது ஜீவன் போகங்களை அனுபவிப் பதற்கு முதலாய் இருப்பவன் என்பது பெருளாகும்.

"மஹேஸ்வரன்" என்பது ஜீவனுக்குத் தலைமையாய் இருப்பவன் என்பது பெருளாகும்.

"பரமாத்மா" என்பது க்ஷர ஆத்மாவாகிய ஜீவனுக்கு மேற்பட்ட ஆத்மாவாய் இருப்பவன் என்று பொருளாகும்.

கீதைக்கு உரை எழுதியுள்ளவர்கள் எல்லாம் க்ஷர புருஷனாகிய ஜீவாத்மாவிற்கும் அக்ஷர புருஷனாகிய பரமாத்மாவிற்கும் வேறுபாடு தெரியாமல் குழம்பி உள்ளனர்.

கைவல்யம் கூறும் பாடல்:

அச்சுவத்தமென்று ஒரு மரம் அதில் இரண்டு
அரும் பறவைகள் வாழும்
நச்சும் அங்கொரு பறவையம் மரக்கனி
நன்று நன்று எனத்தின்னும்
மெச்சும் அங்கொரு பறவைதின் னாதென
வியங்கியப் பொரு ளாகி
வச்சு மாமறை சீவனை ஈசனை
வகுத்தவாறு அறிவாயே

[கைவல்யம் சந்தேகம்தெளிதல் – 58]

**பொருள்:**

அரசு என்று சொல்லப் பெற்ற ஒரு விருட்சம் உண்டு. அவ்விருட்சத்தின்கண் இரண்டாகிய பறவைகள் பற்றியிருக்கும். அவ்விருட்சத்தின்கண் உள்ள இரண்டு பறவைகளுள் போகங்களை விரும்புகின்ற ஒரு ஜீவனாகிய பறவை அவ்விருட்சத்தின் கனிகளை இது நல்லது நல்லது என்று கருதி விரும்பி உண்ணும். பரவப்படும் ஈசனாகிய மற்றொரு பறவை அவ்விருட்சத்தின்கண் உள்ள கனிகளை விரும்பி உண்ணாமல் நிற்கும் என்று குறிப்புப் பொருள் தோன்றும்படி முண்டகோபநிஷத்" ஆகிய மறை சீவனையும் இவ்வாறு பகுத்துக் கூறிய வழியை அறிவாயாக.

**இக்கருத்தைத் திருமூலர்**

அன்னம் இரண்டுள ஆற்றங்கரையினில்
துன்னி இரண்டும் துணைபிரி யாதென்க
தன்னிலை அன்னம் தனியொன்று என்றக்கால்
பின்ன மடவன்னம் பேறணு காதே (2006)

என்றவாறு கூறியுள்ளனார். இங்கே தன்னிலை அன்னம் என்றது அக்ஷர புருஷனாகிய ஈசனையும் "பின்னமட வன்னம்" என்றது க்ஷர புருஷனாகிய ஜீவனையும் குறிக்கும் என்க.

**பெருந்திரட்டு கூறும் காயக் கடவுளின் பெயர்:**

பகவத் கீதை க்ஷேத்ரக்ஞனும் காயக் கடவுளும் ஆகிய அக்ஷர புருஷனுக்கு "உபதிருஷ்டா" முதலான பல பெயர்களைக் கூறினாற் போல பெருந்திரட்டும் அக்காயக் கடவுளுக்குப் பல பெயாகளைக் கூறுகின்றது. அப்பெயர்கள் வருமாறு: துரியாதீதம், மாயோனி, இறுகல், மாமாயை, கெடாதவானம், பரவுடல், சத்தி, எல்லையில்லாதபாழ், அறிவு வடிவாகிய சிற்கனம், செகத்திற்குவித்து, ஈசன்,

சீவனுக்கும் சிவனுக்கும் உள்ள இடையீடு என்கின்ற இத்தனை பெயர்களை உரியனவாகக் கூறும். அவற்றுள் சில பெயர் களின் காரணத்தைப் பார்ப்போம்.

துரியாதீதம் என்றால் சீவதுரியத்தைக் கடந்து நிற்பது. செகவித்து என்றால், இவ்வுலகத் தோற்றத்திற்கு விதையாய் இருப்பது. சீவனிடை பிரியா இடையீடு என்றால் சீவனுக்கும் சிவனுக்கும் இடையே இருந்து அதாவது தலைவனுக்கும் தலைவிக்கும் இடையேயுள்ள உயிர்த்தோழியைப் போல் விளங்கி சிவனோடு கூடுவதற்குத் துணையாய் இருப்பது. இதனைப்போல மற்ற பெயர்க் காரணங்களையும் ஆராய்ந்து உணர்க.

[பெருந்திரட்டு பக்கம் 402]

ஒருவர் சீவனை மட்டும் ஆராய்ந்துணர்ந்தால் போதாது. மேலும் காயக் கடவுளாகிய பரதுரியத்தையும் ஆராய்ந்து உணர வேண்டும். அதன் பின் இறுதியாகிய சிவதுரியத்தையும் ஆராய்ந்து உணர வேண்டும் என்பது திருமூலர் கருத்து. பேறாக அமைவது சீவதுரியம் அன்று; பரதுரியம் அன்று; சிவதுரியமே ஆகும் என்பது திருமூலர் கருத்து. சிவதுரியத் திற்கு ஐக்கியப் பொருள் என்று ஒரு பெயரும் உண்டு.

மேலே திருமந்திரம் கூறும் சீவதுரியம் பரதுரியம் சிவதுரியம் என்னும் மூன்று பொருள்களைப் பற்றியும் கீதை கூறும் ஜீவபூதமாகிய க்ஷரபுருஷன் க்ஷேத்ரக்ஞனாகிய அக்ஷர புருஷன் மேற்சொன்ன இரண்டிற்கும் மேற்பட்ட உத்தம புருஷன் (புருஷோத்தமன்) என்னும் மூன்று புருஷர்களையும் அறிஞர்கள் ஆராய்ந்தால் இவை திருமந்திரம் கூறும் மூன்று பொருளுடன் கீதை கூறும் பொருள்களும் ஒத்திருத்தலை உணர்ந்து கொள்ளலாம். அவ்வாறு ஒத்திருக்குமேயானால்

திருமந்திரத்தைப் போற்றும் சைவரும், கீதையைப் போற்றும் வைணவரும் சமய உணர்வால் வேறுபட வேண்டுவதில்லை என்பது என் கருத்து. ஆகவே, சைவரும், வைணவருமேயன்றி ஏனைய சமயத்தவர்களும் ஒன்றே தெய்வம் என்று கூறும் திருமூலரின் கருத்தினை ஏற்றுக் கொண்டு வேறுபாடு இல்லாமல் இருக்க வேண்டும் என்பதே எனது வேண்டுகோளாகும்.

# பகுதி - ஆ

# காயத்துள் நின்ற கடவுளை உணர்த்தும் திருமந்திரப் பாடல்கள்

## கடவுள் வாழ்த்து

1. ஒக்கநின் றானை உலப்பிலி தேவர்கள்
நக்கனென் றேத்திடு நாதனை நாடொறும்
பக்கநின் றார்அறி யாத பரமனைப்
புக்குநின் றுன்னியான் போற்றிசெய் வேனே. (3)

இப்பாட்டு காயத்தில் நின்ற "அட்சர புருஷன்" என்னும் பரதுரியமாகிய தெய்வத்தை வாழ்த்தியது.

**பொழிப்புரை:**

**ஒக்க நின்றானை:** உயிர் என்னும் சீவதுரியத்துடன் ஒருங்கு சேர்ந்து இருப்பவனை.

**உலப்பிலி:** அழிதல் இல்லாதவனை, இப்பொருளைக் கருதிய கீதை "அட்சர புருஷன்" என்று கூறும்.

**தேவர்கள் நக்கன் என்று ஏத்திடும் நாதனை:** தேவர்கள் எல்லாம் காரண உபாதியாகிய ஆடையற்ற பரதுரியம் என்று கூறப்படும் தலைவனை. **நக்கன் - ஆடை அற்றவன்**

இயக்கும் தெய்வமாகிய பரன் காரண உபாதியோடு கூடியிருப்பன். அவ்வுபாதி நீங்கிய நிலையே **பரதுரியம்** என்க. உபாதி நீங்கிய நிலை நக்க நிலையாகும்.

**நாள்தோறும் பக்கநின்றார் அறியாத பரமனை:** நாள்தோறும் தன் பக்கத்திலே உள்ள சீவர்களாகிய க்ஷர புருஷரால் அறியப் படாமல் இருக்கும் அட்சர புருஷனை. இங்கு பக்க நின்றார் என்பது சீவனை, உடம்பினுள் பரனும் சீவனும் சேர்ந்து நிற்றலால் சீவனை பக்க நின்றார் என்று குறிப்பிட்டார். இத்தகைய காயத்தில் நின்ற கடவுளை.

**புக்கு நின்று உன்னி யான் போற்றி செய்வேனே:** யான் தத்துவமசி வாக்கியத்தால் ஆராய்தலை மேற்கொண்டு அறிந்து நினைத்து வணங்குகின்றேன். ஒக்க நிற்றலும் உலப்பிலியா இருத்தலும் நக்கனாய் இருத்தலும் பக்க நின்றால் அறியப்படாமல் இருத்தலும் ஆகிய இவையெல்லாம் "காயத்துள் வாழும் கடவுள்" இலக்கணம் என்க.

## இதுவும் அது

2. ஆதியு மாய்அர னாய்உட லுள்நின்ற
வேதியு மாய்விரிந் தார்ந்திருந் தான்அருட்
சோதியு மாய்ச் சுருங் காததோர் தன்மையுள்
நீதியு மாய்நித்த மாகிநின் றானே. (15)

**ஆதியுமாய்:** படைத்தலைச் செய்யும் அயனாய்,

**அரனாய்:** அழித்தலைச் செய்யும் அரனாகி,

**உடலுள் நின்ற வேதியுமாய்:** உடம்பிலே இருந்து பல வேறு பாடுகளைச் செய்பவனாய்.

**விரிந்து ஆர்ந்து இருந்தான்:** பல செயல்களில் விரிந்து நின்று நோக்கிப் பொருள்களை உண்டு இருந்தான்.

**அருட்சோதியுமாய்:** சீவனுக்கு அருள் செய்யும் ஒளிப் பொருளாகி

சுருங்காததோர் தன்மையுள் நீதியுமாய்: குறையாத ஒரே தன்மையுள் அமைந்த நீதியாய்

நித்தமாய்: அழியாதவனாய்

நின்றானே: உடலில் எழுந்தருளி இருந்தான் என்க. நித்தமாய் என்றதால், அட்சர புருஷன் என்க.

## இதுவும் அது

3. தொடர்ந்துநின் றானைத் தொழுமின் தொழுதால்
படர்ந்துநின் றான்பரி பாரக முற்றும்
கடந்துநின் றான்கம லம்மலர் மேலே
உடந்திருந் தானடிப் புண்ணிய மாமே. (26)

தொடர்ந்து நின்றானை: உடம்பிடத்தே சீவனை இயக்குவதற்குப் பின் தொடர்ந்து நின்ற இறைவன் என்க. அத்தகைய இறைவனைத் தொழுமின். அப்படித் தொழுதால் உங்களுக்குப் பாவம் நீங்கிப் புண்ணியம் விளையும் என்க.

படர்ந்து நின்றான்: சீவனோடும் சீவனோடு கூடிய மனம் ஐம்புலன்கள் என்னும் இவற்றினோடும் படர்ந்து நின்றான் என்க.

பரி பாரக முற்றும் கடந்து நின்றான்: தன்னால் தாங்கப் படும் உலகங்கள் எல்லாவற்றையும் கடந்து நின்றான்.

கமலம் மலர் மேலே உடந்திருந்தான்: நெஞ்சத் தாமரையின் மேல் சீவனாகிய சரபுருடனுடன் கூடி இருக்கின்ற அட்சர புருடன் என்றதாம்.

## உயிர் நிலையாமை

4. வேங்கட நாதனை வேதாந்தக் கூத்தனை
வேங்கடத் துள்ளே விளையாடு நந்தியை
வேங்கடம் என்றே விரகறி யாதவர்
தாங்கவல் லாருயிர் தாமறி யாரே (190)

"வேங்கடம்" என்பது வெந்தழியும் குடம் போன்ற உடம்பு என்று பொருள்படும். இவ்வுடம்பிற்கு நாதனாய் இருப்பவன் "க்ஷேத்ரி" என்ற உபதிருஷ்டா ஆகும்.

இப்பாட்டின் பொருள்: வெந்தழியும் குடம் போன்ற உடம் பிற்கு நாதனாக இருப்பவனை, வேதாந்த மகா வாக்கியத்துள் "தத்" என்னும் பதத்திற்கு உரியவனாய் இருப்பவனை வேங்கடமாகிய உடம்புள் இருந்து பல வகையாக நடிப்பவனை, அத்தகைய "க்ஷேத்திரிஞை" இவ்வுடம்பு அழியும் என்று கருதும் அறிவில்லாத மக்கள் அறிந்து மனத்தில் தாங்குவரோ? தாங்கார் என்க. அவர் உயிராகிய தம்மையும் அறியார் என்க.

இங்கே வேங்கடநாதன் என்றது உடம்பினில் வாழும் பரன் சீவன் என்ற இரண்டில் பரனாகிய க்ஷேத்திரிஞையைக் குறிக்கும்.

வேங்கடம்—க்ஷேத்திரம்
நாதன்—உடம்பிற்குத் தலைவனாகிய க்ஷேத்ரி

இப்பாட்டின் பொருளை அறிஞர் ஆழ்ந்து உணர்க.

## மறைந்திருத்தல்

5. உள்ளத்து ஒருவனை உள்ளுறு சோதியை
உள்ளம்விட்டு ஓரடி நீங்கா ஒருவனை
உள்ளமும் தானும் உடனே இருக்கினும்
உள்ளம் அவனை உருவறி யாதே. (431)

உள்ளத்து ஒருவனை – உயிரின்கண் அவ்வுயிரை இயக்கு பவனாய் அமைந்துள்ள ஒன்றாகிய கடவுளை.

உள்ளுறு சோதியை – புறச்சோதி, அகச்சோதி என்ற இரண்டில் அகச்சோதியாய் விளங்கி உயிரை அறியச் செய்பவனை.

உள்ளம் விட்டு ஓரடி நீங்கா ஒருவனை – உயிரை விட்டு ஒரு சிறிது தூரம் கூட விலகாமல் இருப்பவனை.

உள்ளமும் தானும் உடனே இருக்கினும் உள்ளம் அவனை உருவறியாதே – உயிரும் அதனை இயக்குபவனாகிய தானும் ஒருங்கே இருந்தாலும், உயிர் அவனுடைய தோற்றத்தை அறியாமல் கீழ்ப்பட்டு இருப்பன் என்க.

எனவே, உயிரால் அறியப்படாமல் இருக்கும் காயக் கடவுளை உயிர் அறிவது எப்படி எனில் தன்னை அக்கடவுள் இயக்குகின்ற இயக்கத்தினால் அனுமானித்து உணர்ந்து கொள்ள வேண்டும் என்க. அக்கடவுள் உயிரை எவ்வெவ்வாறு இயக்குகின்றார் எனில் ஒரு உடம்பிலுள்ள உயிரை மற்றொரு உடம்பிலே கொண்டுவந்து நிலை நிறுத்தியும் அதற்கு அவ் வுடம்பில் பல இன்பதுன்பப் புசிப்பைக் கொடுத்தும் பின் அவ் வுடம்பிலிருந்து நீக்கியும் ஆகிய இவற்றையெல்லாம் அக் கடவுள் செய்யும் என்க.

## இதுவும் அது

6. இன்பப் பிறவி படைத்த இறைவனும்
துன்பம்செய் பாசத் துயருள் அடைத்தனன்
என்பிற் கொளுவி இசைந்துறு தோல்தசை
முன்பிற் கொளுவி முடிகுவ தாயே. (432)

இன்பப் பிறவி படைத்த இறைவனும் – இன்பத்துக்கு ஏதுவான, தெய்வப் பிறவியைப் பெற்ற காயத்தில் வாழும் கடவுளும்.

என்பிற் கொளுவி இசைந்துறு தோல்தசை முன்பிற் கொளுவி முடிகுவ தாயே – எலும்பினாலே அடி அமைத்துக் கொண்டு பொருந்திய தோல், தசை முதலான பொருள்களால் அமைந்த உடம்பினை ஆக்குவதால் முடிவு செய்து கொண்டு.

துன்பம்செய் பாசத் துயருள் அடைத்தனன் – துன்பத்தை விளைவிக்கின்ற உடம்பாகிய பாசத் துயரத்திற்குள்ளே தன்னையும் அடைத்துக் கொண்டான்.

க்ஷேத்ரக்ஞன் என்றும், பரதுரியம் என்றும், இயக்கும் முதல்வன் என்றும், கூறப்பட்ட இறைவன் தன்னாலே இயக்கப் படும் உயிருக்காக உடம்பைப் படைத்து அவ்வுடம்பில் தானும் குடிபுகுந்தான்.

காயக் கடவுள் உடம்பினுள் மறைந்திருக்கின்றான் என்பது கருத்து.

## இதுவும் அது

7. இறையவன் மாதவன் இன்பம் படைத்த
மறையவன் மூவரும் வந்துடன் கூடி
இறையவன் செய்த இரும்பொறி யாக்கை
மறையவன் வைத்த பரிசறி யாரே. (433)

**இறையவன் மாதவன் இன்பம் படைத்த மறையவன் மூவரும் வந்துடன் கூடி** – அரனாகிய இறையவனும் அரியாகிய மாதவனும் அயனாகிய இன்பம் படைத்த மறையவனும் என்னும் மூவரும் ஒருங்குகூடி வந்தாலும்.

**இறையவன் செய்த இரும்பொறி யாக்கை மறையவன் வைத்த பரிசறியாரே** – இறைவனால் படைக்கப்பட்ட இவ்வுடம்பின்கண் அதை இயக்குவதற்காக அவ்வுடம்பினுள் வந்து கூடி மறைந் திருப்பவனாகிய காயக் கடவுளின் இயல்பினை அவர் அறியார்.

காயக்கடவுள் உடம்பில் மறைந்திருத்தலால் அவனை மறையவன் என்றார். ஆதலால் இங்கே மறையவன் என்றது காயக் கடவுளை. இவனைக் கள்வன் என்றும் கூறுவர்.

மறையவன் என்ற சொல்லால் மறைந்திருத்தலை உணர்த்துகின்றார்.

8. உய்ந்தனம் என்பீர் உறுபொருள் காண்கிலீர்
கந்தம் மலரில் கலக்கின்ற நந்தியைச்
சிந்தை யுறவே தெளிந்திருள் நீங்கினால்
முந்தைப் பிறவிக்கு முலஷித் தாமே. (1460)

இப்பாட்டு யோகம் என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ளது.

**பொ–ரை:**

நாம் பிழைத்துக் கொண்டோம் என்று கருகின்றவர்களே! நீங்கள் உங்கள் உடம்பினுள் மிக்க பொருளைக் காணும் ஆற்றல் இல்லாதவராக உள்ளீர்களே! மலரிடத்து மணத்தைப் போல உங்களிடத்தில் கலந்து வாழ்கின்ற காயக் கடவுளாகிய

நந்தியை உங்கள் சிந்தை பொருந்தும்படி சிந்தித்து தெளிந்து அதனால் உங்கள் அறியாமை நீங்கிவிட்டால், போன பிறவியில் நீங்கள் செய்த புண்ணியத்துக்கு இது அடியான விதையாகும்.

நந்தியை அறிந்து சிந்தையுள் தெளிந்திருத்தலே யோகம் என்க.

குறிப்பு

உறு பொருள் என்றது உடம்பிலுள்ள பல பொருள்களுள் மிக்க (உயர்ந்த) பொருளாகும்.

உறு என்கின்ற உரிச்சொல் மிகுதி என்கின்ற பொருளில் வரும் என்பதை உணர்க.

மாணிக்க வாசகரும் "உற்ற யாக்கையில் உறுபொருள்" (அதிசயப்பத்து பாட்டு எண் 9) என்பர்.

## காயக் கடவுளாகிய விளக்கு

9. மாலை விளக்கும் மதியமும் ஞாயிறும்
சாலை விளக்கும் தனிச்சுடர் அண்ணலுள்
ஞானம் விளக்கிய நாதன்என் உள்புகுந்(து)
ஊனை விளக்கி உடன்இருந் தானே. [1529]

இப்பாட்டு தீவிரதரம் என்ற தலைப்பில் இடம் பெற்றுள்ளது.

பொ-ரை:

மாலைக் காலத்தை விளக்குகின்ற திங்களும், காலைக் காலத்தை விளக்குகின்ற ஞாயிறும், வீட்டினை விளக்குகின்ற ஒப்பற்ற சுடரும் ஆகிய இவை போன்ற அண்ணலாகிய

காயக் கடவுள் உள்அறிவை விளக்கிய நாதன் என்னுள் புகுந்து என் உடம்பை நற்செயல்களால் விளக்கி என்னுடன் இருந்தான்.

இப்பாட்டு காயக் கடவுள் உள்ளிருந்து விளக்கம் செய்த தீவிரதர நிலையைக் கூறுகின்றது.

தீவிரதரம் உடையார்க்கு இறைவன் உட்புகுந்து உணர்த்துவான் என்பது.

10. ஆயத்துள் நின்ற அறுசமயத் தேரும்
காயத்துள் நின்ற கடவுளைக் காண்கிலர்
மாயக் குழியில் விழுவர் மனைமக்கள்
பாசத்தில் உற்றுப் பதைக்கின்ற வாறே. (1530)

இப்பாட்டு புறச்சமய தூடணம் என்ற தலைப்பில் இடம் பெற்றுள்ளது.

பொ-ரை:

கூட்டமாக நின்ற அறுசமயவாதிகள் எல்லோரும் தம் உடம்பினில் நின்ற இறைவனைக் காணும் ஆற்றல் இல்லாதவர்களாய் உள்ளனர். அவர், கர்யக் கடவுளைக் கண்டு அறிவு பெறாமையால் மயக்கமாகிய குழியிலே விழுவர். மனை, மக்கள் என்னும் பற்றில் பொருந்திப் பதைப்பர்.

இப்பாட்டு, காயக் கடவுளை அறியாத புறச்சமயத்தாரை இழித்துக் கூறியது.

11. உள்ளத்து ளேதான் கரந்தெங்கும் நின்றவன்
வள்ளல் தலைவன் மலருறை மாதவன்
பொள்ளற் குரம்பைப் புகுந்து புறப்படும்
கள்ளத் தலைவன் கருத்தறி யார்களே. (1531)

இதுவும் புறச்சமய தூடணப் பாட்டாகும்.

பொ-ரை:

(காயக் கடவுள்) உயிரின் உள்ளே தான் மறைந்திருந்து கொண்டு உடம்பெங்கும் நின்றனாய் இருப்பன். சீவனுக்கு வேண்டியவற்றைக் கொடுக்கும் தலைவனாக இருப்பன். உடம்புள் நெஞ்சத் தாமரையில் எழுந்தருளியிருக்கும் மாதவன். அத்தகையோன் ஒன்பது துவாரங்களை உடைய உடம்பினில் புகுந்து குறிப்பிட்ட காலம் வரை அதிலிருந்து பின்னர் மற்றொரு உடம்பை நோக்கிப் புறப்பட்டுச் செல்லும், கள்ளத் தலைவனாக உள்ளான். அவனைப் புறச்சமயவாதிகள் கருதி அறியார்கள்.

இப்பாட்டு கீதையில் பதினைந்தாவது அத்தியாயத்தி லுள்ள எட்டாவது சுலோகக் கருத்தை உட்கொண்டது. மலர் களில் நின்று மணங்களைக் காற்று எடுத்து ஏகுவது போல க்ஷேத்ரக்ஞனாகிய காயக் கடவுள் உடம்பை எடுக்கும் பொழுதும், விடும் பொழுதும் அவ்வுடம்பிலுள்ள ஜீவனையும், இந்திரியங்களையும் தன்னுடன் பற்றிக் கொண்டே போகிறான் என்பது அச்சுலோகப் பொருள். ஆனால் அச்சுலோகத்திற்குப் பொருள் எழுதியவர்கள் அச்சுலோகத்திலுள்ள 'ஈஸ்வரன்' என்ற சொல்லிற்கு க்ஷேத்ரக்ஞனாகிய காயக் கடவுள் என்று பொருள் கூறாமல் ஜீவன் என்றே பொருள் கூறிக்கொள்வர். எனவே, இச்சுலோகக் கருத்தை அறிஞர்கள் ஊன்றி உணர்க.

12. உள்ளத்தும் உள்ளன் புறத்துள்ளன் என்பவர்க்கு
உள்ளத்தும் உள்ளன் புறத்துள்ளன் எம்மிறை
உள்ளத்தும் இல்லை புறத்தில்லை என்பவர்க்கு
உள்ளத்தும் இல்லை புறத்தில்லை தானே. (1532)

இதுவும் புறச்சமய தூடணப் பாட்டாகும்.

பொ-ரை:

எம்முடைய இறைவன் உள்ளத்தும் உள்ளான் புறத்தும் உள்ளான் என்னும் ஆத்திகர்க்கு, அவன் அவர் கருதியபடி உள்ளத்துளேயும் இருக்கின்றான். வெளியிடங்களிலும் உள்ளான்.

இறைவன் உள்ளத்தும் இல்லை, புறத்தும் இல்லை என்கின்ற நாத்திகர்க்கு அவன் இரண்டிடங்களிலும் அவர்க்கு இல்லை.

இது நாத்திகராகிய புறச்சமயங்களை இகழ்ந்து கூறியது. நாத்திகரும் ஒரு புறச்சமயவாதிகள் என்க.

13. அதுவுணர்ந் தோனொரு தன்மையை நாடி
எதுவுண ராவகை நின்றனன் ஈசன்
புதுவுணர் வான புவனங்கள் எட்டும்
இதுவுணர்ந் தென்னுடல் கோயில் கொண்டானே.
(1722)

இப்பாட்டு அண்டலிங்கம் என்ற தலைப்பில் உள்ளது.

பொ-ரை:

புதுமையான உணர்வைப் பெற்றிருக்கும் எட்டுப் புவனங்களிலும் எதுவும் உணராதபடி ஈசன் எங்கும்

நின்றனன். இந்நிலை அண்டலிங்கத்தின் இயல்பாகும். அப்படி அண்டங்கள் முற்றிலும் நிறைந்திருக்கும் இறைவன் அவ் அந்த அண்டப் பொருள்களுள் இதுவும் ஒன்று எனக் கருதி என்னுடைய உடலிடத்தும் கோயில் கொண்டான். அவ் விறைவன் இவ்வாறு அண்டத்திலும் பிண்டத்திலும் நின்றாலும் அவன் ஒரு தன்மையனே ஆவன் என்க.

14. உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிவார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே. (1823)

இப்பாட்டு சிவபூசை என்ற தலைப்பில் உள்ளது.

**பொ-ரை:**

பூசையானது அகப் பூசை என்றும் புறப்பூசை என்றும் இருவகைப்படும். அவற்றுள் அகப்பூசை செய்பவர்க்கு ஒருவருடைய மனமே கர்ப்பக்கிரகம் என்னும் பெருங்கோயிலாக அமையும். மாமிசத்தால் ஆன தூலஉடம்பு திருச்சுற்று ஆலை என்னும் ஆலயமாகும். தூல உடம்பில் உள்ள வாயே கோபுர வாயிலாகும். தெளிவாகத் தெளிந்தவர்க்கு உயிர் என்கின்ற ஒன்றே சிவலிங்க உருவாக அமையும். வஞ்சகம் செய்யும் ஐம்புலன்கள் எல்லாம் அக்கோயிலுக்குக் கருப்பு இல்லாத விளக்காகும் என்க.

காளா-கருப்பில்லாத

உயிருக்குள் சிவன் எழுந்தருளி இருத்தலின் அவ்வுயிர், சிவன் எழுந்தருளியிருக்கும் சிவலிங்க வடிவாக ஆனது; அகப்பூசையைக் கருதியது.

## பசு இலக்கணம் பிராணன்

15. உன்னும் அளவில் உணரும் ஒருவனைப்
பன்னு மறைகள் பயிலும் பரமனை
என்னுள் இருக்கும் இளையா விளக்கினை
அன்ன மயமென்று அறிந்து கொண்டேனே. (2005)

இப்பாட்டு காயக் கடவுளாகிய ஒருவன் உடம்பினுள் அன்னத்தின் வடிவாய் உள்ளான் என்பதைக் கூறுகின்றது

ஹம்சம்— அன்னம்

**பொ-ரை:**

முகக்கண்ணால் பார்த்தறியாமல் அகக் கண்ணால் உன்னி அறியும் ஒருவனாகிய காயக் கடவுள் வேதாந்த மகா வாக்கியத்துள் தத்பதத்தால் பயிலும் பரமனாக உள்ளான். அவன் எனக்குள்ளே விளங்குகின்ற "சீவ விளக்கு" "பர விளக்கு" என்னும் இரண்டுள் பரவிளக்காகிய இறைவனாக உள்ளான். அவனை அன்ன வடிவினன் என்று யான் உணர்கின்றேன்.

அடுத்த பாட்டாலும் இச்செய்தியை உணர்க:

## இதுவுமது

16. அன்னம் இரண்டுள ஆற்றங் கரையினில்
துன்னி யிரண்டுந் துணைப்பிரி யாதென்க
தன்னிலை அன்னம் தனியொன்ற தென்றக்கால்
பின்ன மடவன்னம் பேறணு காதே. (2006)

**பொ-ரை:**

அழியாத பிரகிருதியால் உண்டான சம்சாரம் என்னும் ஆற்றங்கரையினிலே; "க்ஷர புருஷனாகிய" சீவன் என்றும்

"அக்ஷர புருஷனாகிய" ஈசன் என்றும் இரண்டு அன்னங்கள் உள்ளன.

அவ்விரண்டும் ஒன்றையொன்று பிரியாத துணை அன்னம் என்க. அவ்விரண்டுள் தன்னிலை அன்னம் என்னும் ஈசனாகிய அன்னம் சீவனுடன் சேராமல் தனித்து இருக்கும் என்று கூறின், சீவனாகிய பின்ன மடவன்னம், தான் அடையக் கூடிய இம்மைப் பேறு மறுமைப் பேறு என்ற இரண்டையும் அடையாதென்க. எனவே சீவனாகிய அன்னம் பேற்றினை அடைவதற்காக ஈசனாகிய அன்னம் அதனுடன் ஒன்றி இருக்க வேண்டும் என்க.

17. குணவிளக் காகிய கூத்தப் பிரானும்
மணவிளக் காகிய மன்னுயிர்க் கெல்லாம்
பணவிளக் காகிய பல்தலை நாகங்
கணவிளக் காகிய கண்காணி யாகுமே. (2019)

காயக் கடவுளாகிய கூத்தப்பிரான் உயிர்களுக் கெல்லாம் கண் காணியாக உள்ளான் என்பதைக் கூறுகின்றது. போதன் என்ற தலைப்பில் உள்ளது.

பொ-ரை:

நற்குண விளக்காகிய கூத்தப்பிரானும் உடம்பினில் வாழும் மன்னுயிர்க்கெல்லாம், பல தலைகளைப் பெற்றிருக்கின்ற நாகப் பாம்பு ஓர் உடலைப் பெற்றிருப்பதைப் போல, கூத்தப்பிரானும், தான் ஒருவனாக இருந்து, உயிர்கள் ஐம்பொறியாலும் உணரும் உணர்வைத் தான் கண் காணிப்பவனாக இருப்பன் என்பதை உணர்க.

மணவிளக்கு — சீவபோதம்
குணவிளக்கு — பரபோதம்
கணவிளக்கு — இந்திரியங்களின் அறிவு

18. கண்காணி யில்லென்று கள்ளம் பலசெய்வார்
கண்காணி யில்லா விடமில்லை காணுங்கால்
கண்காணி யாகக் கலந்தெங்கு நின்றானைக்
கண்காணி கண்டார் களவொழிந் தாரே. (2067)

இப்பாட்டு பொதுவாக எல்லா மக்களுக்கும் பொருந்துவது ஆயினும் கூடா ஒழுக்கம் என்ற தலைப்பில் வருதலால் சிறப்பாகத் துறவிகளுக்கே உரியது.

**பொ-ரை:**

மேலேயிருந்து கண்காணிப்பவன் இல்லையென்று கருதிக் கொண்டு கூடா ஒழுக்கமாகிய கள்ளச் செயல்கள் பலவற்றைத் துறவிகள் செய்வர். அவர்களுக்கு நான் ஒன்று கூறுகின்றேன். நீவிர் தத்துவ நூல்களை ஆராய்ந்து காணுங்கால் கண் காணிக்கும் இறைவனாகிய காயக் கடவுள் இல்லாத இடமே இல்லை, என்பதை உணர்ந்து கொண்டு இருப்பீர்கள். எனவே அவன் நம் உடம்பில் உள்கலந்து எங்குமாய் கண்காணிப் பவனாக உள்ளான் என்பதை அறிந்தவர் எவரும் கள்ளத் தொழில் செய்யார் என்க.

கள்ளனேன் கள்ளத் தொண்டாய் என்னும் திருநாவுக்கரசர் பாடலை ஒப்பு நோக்குக.

19. காயக் குழப்பனைக் காயநன் னாடனைக்
காயத்தி னுள்ளே கமழ்கின்ற நந்தியைத்
தேயத்து ளேயெங்குந் தேடித் திரிவார்கள்
காயத்துள் நின்ற கருத்தறி யாரே. (2071)

கூடா ஒழுக்கம் என்னும் தலைப்பில் இப்பாட்டு இருத்தலால் இப்பாட்டும் துறவிகளுக்கே உரியது.

துறவிகள் தத்துவ நூல்களை ஆராய்ந்து அக உணர்வால் கடவுளைக் காயத்தில் உணர்ந்து காயத்தில் வழிபட வேண்டும். அவ்வாறின்றி புற உணர்ச்சியால் உலகமெங்கும் கடவுளைத் தேடித் திரிவர் என்றது.

பொ-ரை:

உடம்பின்கண் கலந்து இருப்பவனை, உலகமுற்றிலும் உள்ள எல்லா உடம்பையும் தனக்கு நாடாகக் கொண்டு இருப்பவனை, உடம்பினுள்ளே நன்றாக மணக்கின்ற நந்தியைத் தங்கள் உடம்பிலே தேடி வழிபடாமல் தேசத்துள்ளே எங்கும் தேடித் திரிவார்கள். அவர் கடவுள் உடம்பினுள் நின்ற உண்மையை அறியாதவர் என்க.

20. காயப்பை யொன்று சரக்குப் பலவுள
மாயப்பை ஒன்றுண்டு மற்றுமோர் பையுண்டு
காயப்பைக் குள்நின்ற கள்வன் புறப்பட்டால்
மாயப்பை மன்னா மயங்கிய வாறே. (2122)

இப்பாட்டு உடலிற் பஞ்ச பேதம் என்ற தலைப்பில் இடம் பெற்றுள்ளது.

பொ-ரை:

நம் உடம்பில் பல்வேறு பைகள் உள்ளன. (இப்பையைக் கோசம் என்பர்) அவற்றுள் முதல்பை காயப்பை என்னும் தூல உடம்பாகும். (இது அன்ன மயகோசம்) இவ்வுடம்பினுள் இரதம், உதிரம், இறைச்சி, தோல், மேதை அஸ்தி, வழும்பு, மச்சை, சுக்கிலம் என்கின்ற பல சரக்குகள் உள. (திருமந்திரம் 2125 ஆம் பாட்டால் உணர்க) அடுத்து மாயப்பை என்னும் சூக்கும உடம்பு ஒன்று உண்டு (மாயம் – மறைந்து இருப்பது) அவ்வுடம்பில் காரண உடம்பு என்னும் பையுண்டு.

உடம்பாகிய காயப்பைக்குள் நின்ற காயக்கடவுள் என்னும் "க்ஷேத்ரக்ஞன்", இவ்வுடம்பை விட்டு வெளிப்படு வானேயானால், சூக்கும உடம்பு முதலானவை தூல உடம்பினுள் நிலை பெறா. அவ்வுடம்பு காயக் கடவுளுடன் கலந்து செல்லும். இப்பாட்டு கீதையுள் 15 ஆவது அத்தியாயத்துள் 8 ஆவது சுலோகத்தைத் தழுவியது.

21. மத்திம மொத்த சிலந்தி வலயத்துள்
ஒத்தங் கிருந்து உயிருண்ணு மாறுபோல்
அத்தனும் ஐம்பொறி யாடகத் துள்நின்று
சத்த முதல்ஐந்துந் தானுண்ணு மாறே. (2170)

இப்பாட்டு மத்திய சாக்கிராவத்தை என்னும் தலைப்பில் உள்ளது.

**பொ-ரை:**

காயக் கடவுளாகிய பரன் உயிருக்காக தான் ஐம்புலப் பொருளை நுகர்வதைக் கூறுகின்றது. சிலந்தி என்னும் ஒரு வகைப் பூச்சியானது தன்னால் பின்னப்பட்ட வலையின் நடுவிடத்தில் தங்கி இருந்து நாற்புறத்தும் வலையில் வந்து விழும் பூச்சிகளைச் சென்று நுகர்வது போல, அத்தனாகிய காயக் கடவுளும் ஐம்பொறி இயக்க நடுவிடத்தில் தங்கி இருந்து, சப்தம் முதலான ஐந்து பொருள்களையும் தன்னோடு உடன் இருக்கும் உயிருக்காகத் தான் உண்ணும் என்க.

இப்பாட்டு கீதையின் 15 ஆவது அத்தியாயத்துள் 9 ஆவது சுலோகக் கருத்தை உட்கொண்டது. அச்சுலோகத்தில் "விஷயான் உப சேவதே" – என்னும் பகுதிக்கு விஷயங்களை உடன் உண்ணும். [விஷயங்களை "சீவன்" உடன் உண்ணும்] என்று பொருள் கொள்க.

காயக் கடவுள் உயிருக்காக உண்பதை "உண்ணுமாறு உண்ணே உணர்த்துமாறு உணர்த்தே" என்று வரும் திருவிசைப்பாவால் அறிக.

22. வைச்சன வச்சு வகையிரு பத்தஞ்சும்
உச்சு முடனனைன வானொரு வன்னுளன்
பிச்சன் பெரியன் பிறப்பிலி என்றென்று
நச்சி யவனருள் நானுய்ந்த வாறே. (2171)

இப்பாட்டும் மத்திய சாக்கிராவத்தையில் உள்ளது.

**பொ-ரை:**

வைத்த முறையால் வைக்கப்பட்டு வரும் பலவகைக் கூறுகளை உடைய இருபத்தைந்து தத்துவங்களையும் உடன் அணைந்து இயக்கும் காயக்கடவுளாகிய ஒருவன் நம் உடம்பில் உள்ளான். அவன் புறத்தே பிச்சனாகவும் பெரியோன் ஆகவும் பிறப்பில்லாதவனாகவும் விளங்குகின்றான். அவனுடைய அருளை விரும்பி அவன் அருளால் யான் உய்ந்தேன்.

"வைத்தன வைத்து" – என்கின்ற சொல், "வைச்சன வச்சு" என்று திரிந்தது. "உய்க்கும்" என்ற சொல் "உச்சும்" என்று திரிந்தது.

வேதாந்த தத்துவம் 28-ல் அசித்துருவ தத்துவமாகிய 24-ம் உயிர் ஒன்றும் ஆக 25. இவ்விருபத்தைந்தை காயக் கடவுள் உடன் இருந்து இயக்குவான் என்க.

மேலே ஒக்க நின்றான் என்பதையும் கருதுக.

23. தானவ னாகிய ஞானத் தலைவனை
வானவ ராதியை மாமணிச் சோதியை
ஈனமின் ஞானத் தின்னருட் சக்தியை
ஊனமி லான்தன்னை யூனிடைக் கண்டதே. (2324)

இப்பாட்டு "நின்மலாவத்தை" என்ற தலைப்பில் உள்ளது.

பொ-ரை:

தானவனாகிய ஞானத்தலைவனை என்றது சீவ துரியத்தை; வானவராதியை மாமணிச் சோதியை என்றது சிவதுரியத்தை; ஈனமில் ஞானத்து இன்னருள் சக்தியை என்றது பரதுரியத்தை; இம் முத்துரியங்களையும் என் உடம்பின் கண்ணே ஆராய்ந்து தெரிந்து கொண்டேன் என்பது பொருள். மூன்று துரியங்களையும் கண்டது "நின்மலாவத்தை" என்க.

சீவதுரியமாகிய தான் அவன் ஆவதற்கு உரிமையாகலின் தான் அவனாகிய ஞானத்தலைவன் என்றார். "அருட்சக்தி' என்றது பரதுரியத்தை.

24. மாயனு மாகி மலரோன் இறையுமாய்க்
காயநன னாட்டுக் கருமுத லானவன்
சேயன் அணியன் தித்திக்குந் தீங்கரும்
பாயமு தாகிநின் றண்ணிக்கின் றானே. (2365)

இப்பாட்டு அறிவுதயம் என்ற தலைப்பில் உள்ளது.

பொ-ரை:

உடம்பாகிய நாட்டுக்கெல்லாம், எல்லாப் பொருளும் தோன்றுவதற்குக் கருவாகி, முதலாகி, விளங்குகின்ற

அக்காயக் கடவுள், தானே மாயனும் ஆகிக் காப்பவனாய், மலரோனாகி படைப்பவனாய் இறை என்னும் அரன் ஆகி அழிப்பவனாய் உள்ளான். அவன் சேயனாகவும் அணிய னாகவும் இருந்து தித்திக்கும் தீங்கரும்பாய் அமுதாகி இனிக்கின்றான்.

25. என்னை அறிந்திலேன் இத்தனை காலமும்
என்னை யறிந்தபின் ஏதும் அறிந்திலேன்
என்னை யறிந்திட் டிருத்தலுங் கைவிடா
தென்னை யிட்டென்னென் உசாவுகின் றானே. (2366)

இப்பாட்டு அறிவுதயம் என்ற தலைப்பில் உள்ளது.

**பொ-ரை:**

யான் பிறவிக்கு வந்த இத்தனை காலம் வரை, என் உடம்பை அறிந்ததல்லது உயிராகிய என்னையான் உணர்ந்தே னில்லை. உயிராகிய என்னை அறிந்த பின், உடம்பு முதலான காரிய உபாதிகளை யான் அறிந்தேனில்லை. சீவதுரியமாகிய என்னை அறிந்திட்டு இருத்தலும் என்னைக் கைவிடாமல், உடன் இருக்கும் என் ஐயனாகிய பரதுரியத்தை அறிந்து, பின் என் ஐயனாகிய சிவதுரியத்தை அறிய ஆராய்கின்றேன்.

"கைவிடாது என்னை என்றது" – உடன் இருக்கும் பரதுரியத்தை. இரண்டாவது வந்துள்ள "என்னை" என்பது சிவதுரியத்தை.

26. மாய விளக்கது நின்று மறைந்திடும்
தூய விளக்கது நின்று சுடர்விடும்
காய விளக்கது நின்று கனன்றிடும்
சேய விளக்கினைத் தேடுகின் றேனே. (2367)

இதுவும் அறிவுதயம் தலைப்பில் உள்ளது.

## நான்கு விளக்குகள்

**பொ-ரை:**

மாயையில் தோன்றிய ஞானேந்திரியம் அந்தக் கரணம் என்னும் மாய விளக்கு உலகப் பொருட்களை அறிவதற்காக என்னிடம் இருந்ததாதலின் யான் மேல் நிலைக்குச் சென்றபின் அவ்விளக்கு மறைந்து போயிற்று. அதன்பின் தூய விளக்காகிய சீவதுரியம் தோன்றிற்று. அதன்பின் காய விளக்காகிய பரதுரியம் தோன்றிற்று. இந்த இரண்டையும் துணையாகக் கொண்டு சேய விளக்காகிய சிவதுரியத்தை யான் தேடுகின்றேன்.

27. வள்ளற் றலைவனை வானநன் னாடனை
வெள்ளப் புன்சடை வேத முதல்வனைக்
கள்ளப் பெருமக்கள் காண்பர்கொ லோஎன்று
உள்ளத்தி னுள்ளே யொளித்திருந் தாளுமே. (2994)

இப்பாட்டு தோத்திரம் என்ற தலைப்பில் உள்ளது. இப்பாட்டு உணர்தற்கரிய பொருளை உடையது. நன்கு கருதி உணர்க.

**பொ-ரை:**

வள்ளல் தலைவனை வான நன்னாடனை வேத முதல் வனை என்னும் சொற்கள் "அசிபத சிவத்தைக்" குறிக்கும். கள்ளப் பெருமக்கள் என்பது துவம்பதச் சீவர்களைக் குறிக்கும். உள்ளத்துள்ளே ஒளித்திருந்து ஆளுமே என்பது தத்பதப் பரனைக் குறிக்கும்.

தத்பதப் பொருளாகிய பரன் கள்ளப் பெருமக்களாகிய சீவர் எல்லாம் அசிபதப் பொருளாகிய வேத முதல்வனைத்

தாமே அறியும் ஆற்றல் உடையவரோ என்று கருதி, பக்குவம் வரும் வரை சீவனின் உள்ளத்திலே தன்னை ஒளிய வைத்திருந்து, பக்குவம் வந்தபொழுது அவர்களை ஆட்கொண்டு பின்னர் சிவனை அறிவிக்கும் என்க.

28. கடலிடை வாழ்கின்ற கௌவை யுலகத்
துடலிடை வாழ்வுகொண் டுள்ளொளி நாடி
உடலிடை வைகின்ற உள்ளுறு தேவனைக்
கடலின் மலிதிரைக் காணலு மாமே. (3028)

இப்பாட்டு சர்வ வியாபி என்ற தலைப்பில் உள்ளது.

**பொ-ரை:**

கடலினிடையே வாழ்கின்ற பலவகை ஆரவாரங்களை உடைய இந்த உலகத்திலே, உடலிடை வாழ்வு கொண்டுள்ள உள் ஒளியை ஆராய்ந்து, முதலில் சீவதுரியமாகிய ஒளியை அறிந்து கொண்டபின், உடலிடை தங்கி இருக்கும் பரதுரிய மாகிய உள்ளுறு தேவனை கடலிலே அலை பொருந்தி யிருத்தலைப் போல அவன் உடலிலே உலாவி இருப்பதைக் காண்பதும் ஆகும்.

29. புவனா பதிமிகு புண்ணியன் எந்தை
அவனே உலகில் அடர்பெரும் பாகன்
அவனே அரும்பல சீவனு மாகும்
அவனே இறையென மாலுற்ற வாறே. (3039)

இதுவும் சர்வ வியாபி என்ற தலைப்பில் உள்ளது.

## புவனாபதியின் சிறப்பு

**பொ-ரை:**

புவனங்களுக்குப் பதியாய் உள்ளவன், மிக்க புண்ணிய வடிவினன் எமக்குத் தந்தையாக உள்ளவன், அத்தகையவனே இந்த உலகில் இந்த உலகத்தை இயக்கும் பாகனாக உள்ளான். அதுவுமன்றி அவனே அரிய பல சீவனாகவும் உள்ளான். அவனே இறைவனாகவும் உள்ளான் என்று அவனுடைய பெருமையை உணர்ந்து, யான் அவனிடத்திலே பற்றுச் செய்கின்றேன்.

கீதையில் கண்ணன் சீவர்களை தன் அம்சம் என்றும் அச்சீவனை இயக்குகின்ற "க்ஷேத்ரக்ஞன்" தானே என்றும் கூறுவர்.

30. நீரும் நிலனும் விசும்பங்கி மாருதந்
தூரும் உடம்புறு சோதியு மாயுளன்
பேரும் பராபரன் பிஞ்ஞகன் எம்மிறை
ஊருஞ் சகலன் உலப்பிலி தானே. (3045)

இதுவும் சர்வ வியாபி என்னும் தலைப்பில் உள்ளது.

**பொ-ரை:**

நிலனும் நீரும் நெருப்பும் காற்றும் விசும்பும் ஆகிய இவற்றிற்கு மேல் உடம்பிலே உள்ள சோதியுமாக எம் இறைவன் விளங்குகின்றான். இப்படி விளங்கும் பராபரனும் பிஞ்ஞகனும் ஆகிய எம் இறைவன் சகலன் என்கின்ற காயக் கடவுளாகவும் உள்ளான்.

"சகலன்" என்றால் கலை முதலான மாயா தத்துவங் களுடன் கூடி விளங்குபவன் என்று பொருள். காயக்

கடவுளும் அவனோடு இணைந்திருக்கும் சீவனும் "சகலன்" என்ற பெயரைப் பெறுவர்.

31. வானுக்குள் ஈசனைத் தேடும் மருளர்காள்
தேனுக்குள் இன்பம் சிவப்போ கறுப்போ
தேனுக்குள் இன்பம் சிறந்திருந் தாற்போல்
ஊனுக்குள் ஈசன் ஒளிந்திருந் தானே. (3065)

இப்பாட்டு அதிகப் பாடல்கள் என்னும் தலைப்பில் உள்ளது.

பொ-ரை:

மிகவும் நுண் பொருளாகவும் உட்பொருளாகவும் உள்ள ஈசனை வான் உலகமாகிய புற இடத்திலே தேடித் திரிகின்ற மருளர்களே! நீங்கள் தேனின் உள்ளே உள்ள, உள்உணர்வால் உணரத்தக்க இன்பத்தைப் புறக்கண்ணால் உணரப்படும் சிவப்போ அல்லது கறுப்போ என்று தேடத் தொடங்கிய அவர்களை ஒத்துள்ளீர்கள். தேனின் உள்ளே உள் உணர்வால் உணரப்படும் இன்பம் அமைத்திருத்தல் போல ஈசனும் உம் உடம்பிற்குள்ளேயே தன்னை ஒளிய வைத்துள்ளான். ஆதலின் வானுக்குள் தேடாமல் ஊனுக்குள் தேடி உணர்வீராக.

32. உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
நீடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே. (724)

இப்பாட்டு காயசித்தி உபாயம் என்ற தலைப்பில் உள்ளது.

உடம்பார் அழியில் உயிரார் அழிவர் – ஒருவர் உடம்பு அழிந்து விட்டால் அவருடைய உயிரும் அதிலிருந்து அகன்று போகும்.

திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார் – உடம்பை விட்டு உயிர் அகன்றொழியின் அவர் உறுதியாக மெய்ஞ்ஞான நிலையை அடைய மாட்டார்.

உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே – முன்னே உடம்பினை அழியாமல் பல காலம் வைத்துக் கொள்ளும் காயசித்தி என்னும் உபாயத்தை அறிந்து கொண்டு,

உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே – அக்காய சித்தி முறையால் நீண்டகாள் இருக்கும் படியாக உடலை வளர்த்துக் கொண்டேன். அதனால் உயிரை அவ்வுடம்பினுள் இருக்குமாறு வளர்த்துக் கொண்டேன்.

மெய்ஞானத்தைப் பெறுவதற்காக ஒருவர் உடம்பையும் உயிரையும் வளாத்துக் கொள்ள வேண்டும். உலகியல் வாழ்வை மேம்படுத்தலால் உடம்பையும், ஆன்மீக வாழ்வை மேம்படுத்தலால் உயிரையும் வளர்த்துக் கொள்ளலாம்.

## காயசித்தி உபாயம்

33. உடம்பினை முன்னம் இழுக்கென்று இருந்தேன்
உடம்பினுக்கு உள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்று
உடம்பினை யானிருந்து ஒம்புகின் றேனே. (725)

உடம்பினை முன்னம் இழுக்கென்று இருந்தேன் – இவ்வுடம்பினைப் புன்புலால் ஆக்கப் பெற்று நோய்க்கும் துன்பத்திற்கும் இடமானது என்றும் பொய்யானது என்றும் நினைத்துக் கொண்டு இவ்வுடம்பை இழிந்ததாகக் கருதிக் கொண்டிருந்தேன்.

உடம்பினுக்கு உள்ளே உறுபொருள் கண்டேன் – பின்னர் என் உடம்பினுக்குள்ளே மிக்க பொருளாகிய காயக் கடவுள் வாழ்ந்திருப்பதை அறிந்து கொண்டேன்.

உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான்என்று உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேனே – என் உடம்புக் குள்ளே சிறந்தவனாகிய காயக் கடவுள் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளான் என்று கருதிக் கொண்டு இவ்வுடம்பைத் திருக்கோயிலாகக் கருதி, திருக்கோயிலை ஒருவர் ஓம்புவது போல யான் இவ்வுடம்பை ஓம்புகின்றேன்,

உடம்பை வளர்த்தலைச் **சித்தரந்த சிகாமணி** சகாயத்தலம் என்று கூறும். இதனைப் பின்வரும் பாட்டால் அறிக.

ஏகமாம் ஞான யோகி என்னினும் உடம்பி னானே
போகமாம் முத்தி ஆதி பொருந்துவன் விறகை இன்றி
ஆகுறாது ஒளிரும் அங்கு அதுவென ஆக்கை இன்றி
யோகிதான் ஆன்ம ஞானம் உடையவன் ஆகான் அன்றே

(57 சகாயத்தலம், பாடல் 1)

34. பிறப்பது சூழ்ந்த பெருந்தகை நந்தி
குறிப்பது கூடிய கோலக் குரம்பைப்
பழப்பதி யாவது பற்றறும் பாசம்
அழப்படி செய்வார்க்கு அகலு மதியே. (789)

இப்பாட்டு ஆயுள் பரிட்சை என்ற தலைப்பில் இடம் பெற்றுள்ளது.

**பொ-ரை:**

சீவனுடன் கூடிப் பிறப்பினைப் பெற்ற பெருந்தகை நந்தியாகிய காயக் கடவுள்; அதனுடைய ஆணைக் குறிப்பைக் கூடி நடக்கும் அழகான உடம்பு இது. இவ்வுடம்பே

அவ்விறைவனுக்குப் பழைய பதியாகும். இதை அறிந்து போற்றின் நம்முடைய பாசப்பற்று நீங்கும் என்க.

இவ்வுடம்பு அவ்விறைவனுக்கே பழைய பதியாகும் என்று கருதாமல், இவ்வுடம்பு கெடுதற்குரிய காரியத்தைச் செய்தால் செய்தவர்களுக்கு மதியாகிய அறிவு நீங்கும். எனவே, இவ்வுடம்பு இறைவனுக்குப் பழைய பதியாகும் என்று கருதி அதனைப் பாதுகாக்க வேண்டும் என்பது கருத்து.

உடம்பு இறைவனுக்கு பழைய பதியாகும், என்று கருதிப் போற்றாதவர்க்கு ஆயுள் குறையும் என்க.

35. சாத்திரம் ஒதும் சதுர்களை விட்டுநீர்
மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்குமின்
பார்த்தவப் பார்வை பசுமரத் தாணிபோல்
ஆர்த்த பிறவி அகலவிட் டோடுமே. (1631)

இப்பாட்டு தவம் என்ற தலைப்பில் இடம் பெற்றுள்ளது.

பொ-ரை

அபரஞானத்தைப் பெறுவதற்காக ஒருவர் சாத்திரங்களைப் படிக்க வேண்டும். படித்து அபரஞானத்தைப் பெற்றபின் அதனை விட்டு விட்டு, பரஞானத்தைப் பெறுவதற்காக ஒரு மாத்திரை அளவு காலமாவது காயக் கடவுளை அறிதற் பொருட்டு அகத்துக்கண் கொண்டு, உள்ளே நோக்குவீராக! உள்ளே நோக்கிய அவ் அகப்பார்வை பசுமரத்து ஆணி போல் நன்கு பதிந்து உட்பொருளை அறிவித்தலால் உம்முடைய பிறவித்துயர் எல்லாம் ஓடும். தவம் செய்வார்க்கு அகநோக்கு வேண்டுமென்பது.

36. ஓதலும் வேண்டாம் உயிர்க்குயி ருள்ளுற்றாற்
காதலும் வேண்டாமெய்க் காய மிடங்கண்டாற்
சாதலும் வேண்டாம் சமாதிகை கூடினால்
போதலும் வேண்டாம் புலன்வழிப் போகார்க்கே. (1633)

இப்பாட்டு தவநிந்தை என்ற தலைப்பில் அமைந்துள்ளது.

பொ-ரை:

உயிருக்குள் உயிர் என்னும் காயக் கடவுள் உள்நோக்கத் தால் கிட்டினால் அதனை அறிந்து கொள்வதற்காக நூல்கள் எதையும் ஓத வேண்டியதில்லை. கடவுளுக்குக் காயமே இடம் என்று அறிந்து கொண்டால் தவத்தின்கண் காதல் வேண்டாம். சமாதி நிலை கைவந்து கூடினால் நாம் தவம் செய்து வருந்தலும் வேண்டாம். மேலவற்றைப் போல ஐம்புலன் வழிச் செல்லாதவர்க்கு உறுதிப்பயன் நாடி வேறு எங்கும் செல்ல வேண்டுவதில்லை. எனவே புலன் வழிப் போகாமையே சிறந்த பேறு என்க.

37. வேட்டவி யுண்ணும் விரிசடை நந்திக்குக்
காட்டவும் நாமிலங் காலையும் மாலையும்
ஊட்டவி யாவன வுள்ளங் குளிர்விக்கும்
பாட்டவி காட்டுதும் பாலவி யாகுமே. (1824)

இதுவும் சிவபூசையில் சிவ நிவேதனப் பொருளைப் பற்றிக் கூறியது.

பொ-ரை:

அவி என்கின்ற நிவேதனப் பொருளை விரும்பி உண்கின்ற விரிசடை உடைய நந்தியாகிய இறைவனுக்கு நாம் அவ்விறைவன் விரும்பியபடி காலைப் பொழுதிலும், மாலைப் பொழுதிலும், படைக்க முடியாத நிலையில் உள்ளோம்.

ஆனால் அவ்விறைவனுக்கு எளிதில் படைக்கக்கூடிய உணவு எது என்று ஆராய்ந்தால் நாம் அன்பால் பாடுகின்ற பாடலே நிவேதனப் பொருளாக அமையும்.

நாம் அன்பால் பாடுகின்ற அப்பாடல் பால்சோறு வயிற்றைக் குளிர்விப்பது போல இறைவனுடைய உள்ளத்தைக் குளிர்விக்கும்.

38. ஆவிக் கமலத்தின் அப்புறத் தின்புறம்
மேவித் திரியும் விரிசடை நந்தியைக்
கூவிக் கருதிக் கொடுபோய்ச் சிவத்தினிடைத்
தாவிக்கும் மந்திரந் தாமறி யாரே. (1842)

இப்பாட்டு சிவபூசையில் சிவலிங்க வடிவில் சிவனை ஆவாகனம் செய்யும் முறையைப் பற்றிக் கூறுகின்றது.

**பொ-ரை:**

உடம்பினுள் உயிர் தங்கி இருக்கின்ற இருதயக் கமலத்தின் மேற்பரப்பில் நந்தியாகிய சிவம் உலாவிக்கொண்டு இருக்கும். அதனை ஆவாகன மந்திரத்தால் அழைத்துக்கொண்டு போய் நாம் புறத்தே வழிபடுகின்ற சிவலிங்க வடிவில் அமைத்துக் கொண்டு அதன்பின் அச்சிவலிங்க வடிவத்தை நாம் பூசிக்க வேண்டும். ஆவாகன மந்திரத்தால் அதனை அழைத்து சிவலிங்க வடிவில் அமைத்துக் கொண்டு பூசை செய்யும் முறையைப் பலர் அறியார் என்க.

39. பத்திவிற் றுண்டு பகலைக் கழிவிடும்
மத்தகர்க் கன்றோ மறுபிறப் புள்ளது
வித்துக்குற் றுண்டு விளைபுலம் பாழ்செய்யும்
பித்தர்கட் கென்றும் பிறப்பில்லை தானே. (2069)

இப்பாட்டும் கூடாவொழுக்கம் என்ற தலைப்பில் இருத்தலால் இதுவும் துறவிகளுக்கு உரித்து எனக் கொள்க.

பொ-ரை:

கடவுள் பக்தியை தமக்கு அனுபவ நெறியாகக் கொள்ளாமல் பிறர்க்கு உபதேசித்துப் பொருள் பெறும் வாணிக நெறியாகக் கருதிக் கொண்டு, பிறரிடம் சொல்லி கிடைக்கும் பொருளால் தாம் உண்டு தம் வாழ்க்கையைப் பயன் இல்லாமல் கழிக்கின்ற மயங்கிய அறிவுடையார்க்கு எல்லாம் நிச்சயமாய் மறுபிறப்பு உண்டு என்க. அவ்வாறு இன்றி சஞ்சித வினையாகிய வித்தை அனுபவ வினையாகிய பிராரத்த வினையாக எடுத்துக் கொண்டு, அதனைச் சிவஞானமாகிய உலக்கையால் குத்தி அருந்திப் போக்கி விட்டு, ஆகாமிய வினையாகிய வினை புலத்தை நான், எனது என்னும் இரண்டையும்நீக்கிப் பற்றற்ற செயலால் பாழ்படுத்தி விடும் அன்பு பித்தர்க் கெல்லாம் பிறப்பில்லை என்க.

40. **அவனும் அவனும் அவனை அறியார்**
**அவனை அறியில் அறிவானும் இல்லை**
**அவனும் அவனும் அவனை அறியில்**
**அவனும் அவனும் அவனிவ னாமே.** (1789)

இப்பாட்டுச் சம்பிரதாயம் என்ற தலைப்பில் உள்ளது.

அவன் என்கின்ற சீவதுரியமும் அவன் என்கின்ற பரதுரியமும் அவனை என்ற சிவனை அறியார். இருவரும் சிவனை அறிந்து கொண்டால் அறியக் கூடிய பொருள் வேறொன்றும் இல்லை.

சீவதுரியமும் பரதுரியமும் சிவதுரியத்தை அறிந்து கொண்டால் அவனும் அவனும் என்ற இரண்டும் அவன்

என்பதில் அடங்கி அச்சிவன் சிவதுரியமும் பரதுரியமும் ஆகிவிடும்.

## கருத்து

அவனும் அவனும் என்ற இரண்டும் அச்சிவம் ஆகி விட்டால் இந்த மூன்று பொருள்களின் கூட்டுறவு அவன் இவன் ஆதல் என்கின்ற இரண்டு வாய்பாட்டில் அடங்கி விடும்.

அவனும் அவனும் இவனாதலை இவன் ஆதல் என்று வழங்குவது ஒரு சம்பிரதாயம்.

பின்னிணைப்பு – 1

# பேராசிரியர் திரு. அடிகளாசிரியாரின் வாழ்வும் பணியும்

(அ. சிவபெருமான்)

தமிழ்நாட்டில் தென்னார்க்காடு மாவட்டம் கல்லக்குறிச்சி வட்டத்தின் தென்கோடியில் வடவெள்ளாற்றின் வடக்குக் கரையில் உள்ளது குகையூர் என்னும் கூகையூராகும். இவ்வூரை இலக்கியங்கள் குகையூர் என்று கூறும். பொது மக்கள் கூகையூர் என்று கூறுவர்.

திருமூல நாயனாருடைய கொள்கையில் பயிற்சியுடைய சித்தநாதர் என்னும் சித்தர் ஒருவர் இவ்வூருக்கு வந்து, ஆற்றங்கரைப் புதருள் தங்கி, சிவயோக சமாதியை மேற் கொண்டிருந்தனர். அவர் அட்டமா சித்தியிலும் வல்லவராய் இருந்தார்.

அவ்வூரை ஆண்டிருந்த குறுநில மன்னனாகிய **மாலாங்கன்** என்பவன் சித்தநாதருடைய பெருமையை உணர்ந்து தன் மனைவியுடன் வந்து பேரன்புடன் அவர்க்குப் பணிவிடை செய் தொழுகினான். அவ்விருவருடைய பேரன்பினையும் மகப்பேறின்றி மூப்படைந்துள்ள நிலையினையும் உணர்ந்த சித்தநாதர் அவ்விருவரையும் இளமை உடையவராக ஆக்கி, வீரசைவ சமய நெறியை மேற்கொண்டு வாழுமாறு செய்து, பக்குவற்கு உபதேசிக்கும் மாதவக் குருபரனாக மாலாங்கனை ஆக்கினர்.

அம்மாலாங்கனிலிருந்து அவன் பரம்பரை சித்தநாதேஸ்சுரா தீனமாக ஆயிற்று.

அப்பரம்பரையில் பிற்காலத்தில் **பட்டத்துப் பெரியசாமி ஐயர்** என்பவர் வளர்ந்து வந்தார். அவர் மனைவி **குங்கும அம்மாள்** ஆவர். அவ்விருவரும் நன்கு படித்தவர்.

அவ்விருவர்க்கும் கி.பி. **1910 – இல் சாதாரணயாண்டு சித்திரைத் திங்கள் ஐந்தாம் நாள் ஞாயிற்றுக்கிழமை தனுர்**

**இலக்கினத்தில் பூசம்நாளில் திரு. அடிகளாசிரியர் முதல் மகனாகப் பிறந்தார்.** இவரின் பிள்ளைப்பெயர் **குருசாமி அய்யர்** என்பதாகும். பிற்காலத்தில் தனித்தமிழ் இயக்கத்தலைவர் தவத்திரு **மறை மலையடிகளார்** கருத்துப்படி **திரு. அடிகளாசிரியர்** எனப் பெயரை மாற்றிக் கொண்டார்.

**இளமைக்காலமும் கல்வியும்**

இவர்க்கு ஏழாம் யாண்டில் தந்தையார் காலமாகி விட்டார். இவர் தாயார் குங்கும அம்மாள் என்பவர்தான் இவரைப் பேணிப்புரந்து கல்வி கற்குமாறு செய்தார். பெரம் பலூருக்கு அண்மையிலுள்ள நெடுவாசல் என்னும் ஊர் இவர் தாயார் பிறந்த ஊராகும். தாய்மாமன் இருவராவர். மூத்தவர் திரு. **கு சுப்பிரமணிய தேவர்** இளையவர். திரு. **கு. சிவப்பிரகாச தேவர்** ஆவர். இவ்விருவரும் நன்கு தமிழ் பயின்றவர்கள். மருத்துவக்கலை, சோதிடக்கலை ஆகியவற்றிலும் வல்லவர்கள். அடிகளாசிரியர் இவர்கள் (தாய்மாமன்) வீட்டில் தங்கி, தமிழ்ப் பயிற்சியையும் வடமொழிப் பயிற்சியையும் பெற்றார்.

பெரம்பலூரில் வாழ்ந்த **திரு. மருதநாடார்** என்பவரிடம் சோதிடக் கலையைக் கற்றுக்கொண்டார். முசிறி அரசினர் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராய் இருந்த உயர்திரு. **வீ. குமாரவீரையர்** என்பவரிடம் நன்னூல் காண்டிகை உரையை மட்டும் முறைப்படி பாடங் கேட்டார். 1937-இல் இவர் தனியாகப் பயின்று சென்னைப் பல்கலைக்கழகத்தில் தேர்வெழுதித் தமிழ்ப் புலவர் பட்டத்தைப் பெற்றார்.

**மயிலம் கல்லூரியில் பணி**

14—7—1938-இல் மயிலம் திருமடத்தில் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி என்ற பெயரால் ஒரு தமிழ்க் கல்லூரி தோன்றிற்று. அக்கல்லூரியில் இவர் முதலாசிரியராக அமர்ந்தார். அக்கல்லூரி பல்கலைக்கழக ஒப்புதல் பெற்றபின் 1—7—41 இலிருந்து 30—11—41 வரை விரிவுரையாளராகவும், 1—12—42 இலிருந்து 1—7—1950 வரை துணைத்தலைவராகவும் அங்குப் பணியாற்றினார்.

**கரந்தைத் தமிழ்க் கல்லூரிப் பணி**

பின்னர் 3—7—1950-இலிருந்து 3—7—1970 வரை தஞ்சாவூர் கரந்தைப் புலவர் கல்லூரியில் விரிவுரையாளராகவும், துணை முதல்வராகவும் பணியாற்றினார். 4—4—70-இலிருந்து ஓய்வு பெற்றார்.

**ஓய்விற்குப்பின்**

சேலம் மாவட்டம் ஆத்தூரில் அமைந்திருந்த தனியார் தமிழ்க் கல்லூரி ஒன்றில் முதல்வராக மூன்றாண்டுகள் பணி யாற்றியுள்ளார்.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் ஆராய்ச்சி யாளராக ஓராண்டு (1977) பணியாற்றியுள்ளார்.

20—1—1982 ஆம் நாளிலிருந்து 1—10—1985ஆம் நாள் வரை தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் சுவடிப் புலத்தில் சிறப்புநிலை இணைப்பேராசிரியராக அமர்ந்து தொல்காப்பிய ஆராய்ச்சியைச் செய்து வந்தார். அதன்பின் மூப்பின் காரண மாகத் தமிழ்ப் பல்கலைக்கழகப் பணியிலிருந்து தாமே விலகிக் கொண்டார். மூப்பின் காரணமாகத் தமிழ்ப் பல்கலைக்கழகப் பணியிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்ட அவர் தம் இல்லத்திலிருந்து அப்பணியை (தொல்காப்பிய ஆய்வுப் பணியை) நிறைவு செய்து வழங்கினார்.

**குடும்பம்**

இருந்தமிழே உன்னால் இருந்தேன் வானோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்.

என்று தமிழுக்காக வாழ்ந்து வரும் பேராசிரியர் அடிகளாசிரியர் அவர்கள், தம் பிறந்த ஊரிலேயே பிறந்த கூரை வீட்டிலேயே மண்தரையில் இன்னமும் அமர்ந்து இந்த மண்ணோடு இருக்கும் பற்றை நிலைப்படுத்துவார் போல் வளங்குன்றிய வாழ்வே வாழ்ந்து வருகிறார். தமிழ்ப் பணிக்காகவே தம் பொருளா தாரத்தைச் செலவிட்டு, வேண்டுமென்றே வளங்குன்றிய வாழ்வைத் தேடிக் கொண்டவராவார்.

அறிவுசான்ற மூன்று ஆண்மக்களும், அமைதி சான்ற மூன்று பெண்மக்களும் வாசுகி அனைய மனையாளுமே இவரது சொத்துக்களாக உள்ளனர். சிந்தனை செய்தே சிறந்த இவர் உடல் இன்று பலரின் சிந்தனைக்கு உரியதாக உள்ளது. எழுதி எழுதியே முதிர்ந்த இவரது கைகள் எழுத மறுக்கின்றன. நடந்தே சிறந்த கால்கள் நடை தடுமாறுகின்றன. ஆனால் சிந்தனை மட்டும் தடுமாறாமல் தமிழையே இன்றும் சிந்தித்துக் கொண்டிருக்கின்றது. அகவை (90) முதிர்ந்த நிலையில் எந்த ஆசையும் அற்று, தம் நூல்கள் அச்சேறிச் தமிழகத்தில் உலா வரவேண்டுமென்ற பற்று ஒன்றுடன் மட்டுமே இவர் வாழ்ந்து வருகிறார்.

## அடிகளாசிரியரின் படைப்புகள்

### 1. உரைநூல்கள்:

**அ. உரைப் பதிப்புக்கள் (உரையோடு விளங்கிய நூல்களைப் பதிப்பித்தல்)**

| | | |
|---|---|---|
| 1 | அருணகிரி அந்தாதி – சரசுவதிமகால் வெளியீடு | 1967 |
| 2 | மருதூரந்தாதி உரை–சரசுவதிமகால் வெளியீடு | 1968 |
| 3 | காலச் சக்கரம் – சரசுவதிமகால் வெளியீடு (சோதிட நூல்) | 1969-79 |
| 4 | வராகர் ஓராசாரத்திரம் (சோதிட நூல்) சரசுவதிமகால் வெளியீடு | 1970–81–91 |
| 5 | சிவஞான தீபம் உரை – சரசுவதிமகால் வெளியீடு | 197 |
| 6 | சிவப்பிரகாச விகாசம் உரை–சரசுவதிமகால் வெளியீடு | 1997 |

**ஆ. உரைவரைவுகள் (தாமே உரை எழுதி வெளியிட்டமை)**

| | | |
|---|---|---|
| 7 | முத்துக்குமாரசாமிப் பிள்ளைத் தமிழ்உரை | 1958 |
| 8 | சேக்கிழார் பிள்ளைத்தமிழ் உரை | 1967 |
| 9 | தமிழகக் கல்வெட்டு விளக்கவுரை (மு. கோவிந்தராசனாருடன் இணைந்து எழுதியமை) | 1957–58 |
| 10 | திருவலஞ்சுழி தேவாரப்பாடல்கள் உரை | 1956 |

11 திருவாசகக்கோயில் திருப்பதிகம் உரை 1981
12 சிவபுராணச் சிற்றுரை 1986–96
13 சதமணிமாலை மூலமும் உரையும் 1990
14 சித்தாந்த சிகாமணி அங்கத்தலத்திரட்டு உரை 1992
15 ஸ்ரீமத்சிவஞான பாலய தேசிகர் திருப்பள்ளி எழுச்சி 1993
16 குதம்பைச் சித்தர் பாடலும் உரையும் 1999

## 2. பதிப்பு நூல்கள்:

**(ஓலைச் சுவடிகளிலிருந்து பதிப்பித்தவை)**

17 வீரசைவப் பிரமாணம் 1936
18 சதமணிமாலை (மூலம் மட்டும்) 1938
19 சிவப்பிரகாச விகாசம் (மூலம் மட்டும்) 1939
20 காமநாதர் கோவை 1947
21 மேன்மைப் பதிகம் 1957
22 சதுர்லிங்க தசகோத்திர சதகம் 1968

## 3. ஆராய்ச்சி நூல்கள்:

23 தொல்காப்பியம் – எழுத்து இளம்பூரணம் 1969
24 'ஐவகையடியும்' என்னும் தொல்காப்பிய நூற்பா விளக்கம் (சென்னைப் பல்கலைக்கழகம்) 1977
25 தமிழ் இலக்கண இலக்கியங்களில் சைவசித்தாந்தம் 1978
26 தொல்காப்பியம் – சொல் – இளம்பூரணம் (தமிழ்ப் பல்கலைக்கழகம்) 1990
27 தொல்காப்பியம் – பொருள் – செய்யுளியல் (தமிழ்ப் பல்கலைக்கழகம்) 1985
28 தொல்காப்பியம் – பொருள் – எட்டு இயல் மட்டும் (தமிழ்ப்பல்கலைக்கழகம் – அச்சில்)

## 4 படைப்பிலக்கிய நூல்கள்:

### அ. செய்யுள் வடிவம்

29 பிள்ளைப் பாட்டு 1945
30 திருஅரசிலிக் காதை 1948
31 குழந்தை இலக்கியம் 1963
32 சான்றாண்மை (கோப்பெருஞ்சோழன் பற்றியது) 1964–1975

| | | |
|---|---|---|
| 33 | சென்னிமலை முருகன் தோத்திரம் | 1980 |
| 34 | அரசியல் இயக்கம் | 1981 |
| 35 | பல்சுவைப் பண்ணத்திப் பாடல்கள் (குழந்தை இலக்கியம்) | 1983 |
| 36 | அருள்திரு மாரியம்மன் திருப்பதிகம் | 1984 |
| 37 | உளத்தூய்மை | 1984–94 |
| 38 | தண்ணிழல் (திருமுடிக்காரியைப் பற்றிய அரிய இலக்கியம்) | 1990 |
| 39 | மறவர் நத்தக்குன்றமரும் திருமுருகன் திருவடிப் பாமாலை | 1993 |
| 40 | தொழிலியல் | 1993 |
| 41 | மெய்ப்பொருட் காதை | 1995 |
| 42 | தமிழ் மாண்பும் தமிழ்த் தொண்டும் (தமிழியக்க வெளியீடு) | 1996 |
| 43 | ஒன்பான் கோள் வணக்கப் பாடல்கள் (தமிழியக்க வெளியீடு) | 1999 |

### ஆ. உரைநடை

| | | |
|---|---|---|
| 44 | எங்களூர் | 1937 |
| 45 | தொடக்கப்பள்ளி – நாடகம் | 1949 |
| 46 | வீரசைவ சிவ பூஜாவிதி | 1976 |
| 47 | விலையேற்றமும் வாழும் வழியும் | 1984 |
| 48 | திருமூலரும் பேருரையும் (மகா வாக்கிய ஆராய்ச்சி) | 1998 |
| 49 | காயத்துள் நின்ற கடவுள் | 1999 |
| 50 | தொல்காப்பியச் செய்யுளியல்–ஆராச்சி நூல் (அச்சில்) | 1999 |

## பொருள்முட்டுப் பாட்டினால் முடங்கிக் கிடக்கும் அச்சேறா நூல்கள்

1 குழந்தை இலக்கியம் (தொகுதி மூன்று)
2 கலித்தொகை உரை (குறிஞ்சிக் கலி)
3 பிரபுலிங்கலீலை உரை
4 அடிகளாசிரியரின் சமுதாயப் பாடல்கள்
5 அடிகளாசிரியரின் இலக்கணக் கட்டுரைகள்
6 அடிகளாசிரியரின் இலக்கியக் கட்டுரைகள்
7 திருக்குறள் உரை (133 குறள் வரை)
8 முப்பால் – உரைநடை

# காயத்துள் நின்ற கடவுள்

ஆசிரியர் திரு. அடிகளாசிரியர்

பதிப்பாசிரியர் முனைவர் அ. சிவபெருமான்

## வேண்டுகோள்

திருமந்திரம் கூறும் **சீவதுரியம், பரதுரியம், சிவதுரியம்** என்ற மூன்று பொருளுடன், பகவத்கீதை கூறும் **சரபுருசன், அட்சர புருசன், உத்தம புருசன்** எனற மூனறு பொருளும் ஒத்திருத்தலை உணாந்து கொள்க. இவ்வாறு ஒத்திருக்கும் நிலையில் திருமந்திரத்தைப் போற்றும் சைவரும், பகவத்கீதையைப் போற்றும் வைணவரும் சமய உணர்வால் வேறுபட வேண்டுவதில்லை என்பது என் கருத்து. ஆகவே, சைவரும், வைணவருமே யன்றி ஏனைய சமயத்தவர்களும் **ஒன்றே தெய்வம்** என்று கூறும் திருமூலர் கருத்தினை ஏற்றுக் கொண்டு வேறுபாடு இல்லாமல் வாழ வேண்டும் என்பதே எனது வேண்டுகோளாகும்.

- திரு. அடிகளாசிரியர்

Sabanayagam Offset, Chidambaram - ✆ 23040, 23020 · Chennai - ✆ 4984693, 4661807